வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 17.11.2022 வியாழக்கிழமை | இதழ் : 344 | பக்கங்கள் : 16




# கூட்டமைப்பு ஒருங்கிணைப்பு குழுவை விரைவாகக் கூட்டுமாறு கோரிக்கை!

## ரெலோ, புளொட் தலைவர்கள் சம்பந்தன், மாவைக்கு கூட்டாக கடிதம்!

யாழ்ப்பாணம், நவம்பர் 17

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை உடனடியாகவும் விரைவாகவும் கூட்ட வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவுக்கும் பங்காளிக் கட்சி தலைவர்கள் கூட்டாக கடிதம் எழுதியுள்ளனர்.**

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில்,

"பல தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை கூடுவதற்காக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருப்பினும் அது தொடர்ச்சியாக பல காலம் நடைபெறாமலே இருப்பது கவலைக்குரியது. இதனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருக்கும் அங்கத்துவ கட்சிகளுக்கு

15

# தமிழ்த் தேசியத்தை பிரிக்கவா வடக்குக்கு மாத்திரம் அழைப்பு?

## இராதாகிருஷ்ணன் எம். பி. சந்தேக கேள்வி



கொழும்பு, நவ. 17

நாட்டில் ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கும் பிரச்னை இருக்கும் போது வடக்கு மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்கு வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம்

15

# கிழக்கைத் தவிர்த்த பேச்சு வெற்றிபெறப்போவதில்லை!

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

கொழும்பு, நவ. 17

கிழக்கு மாகாணத்தை தவிர்த்து வடக்குடனான ஜனாதிபதியின் எந்தப் பேச்சும் வெற்றிபெறப் போவதில்லை. எனவே, வடக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் பேச்சுக்கு விடுத்த அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழத் தேசியக் கூட்டமைப்பின்

15

# நீரில் மூழ்கி மீனவர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 17

மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட நெஞ்சுவலியால் மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்று தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் - குருநகரை சேர்ந்த அலோசியஸ் ஜோன்சன் (வயது -40) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த மீனவர், நேற்று முன்தினம் இரவு மீன்பிடிப்பதற்காக படகில் சென்றுள்ளார். துறையிலிருந்து சுமார் 8 மைல் தொலைவில் கடலில் இறங்கி வலைவீசி மீன்

15



# வடக்கு விவசாயிகளுக்கு இலவசமாக யூரியா உரம்!

கொழும்பு, நவ. 17

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் பதுளை மாவட்டங்களில் அரை ஏக்கருக்கு குறைவாக நெல் செய்கை மேற்கொள்ளும் 15, 619 விவசாயிகளுக்கு 50 யூரியா உரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கு தேவையான யூரியா உரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய ஸ்தாபனம் வழங்கியுள்ளது.

15

# வரவு - செலவு திட்டத்தை தோற்கடித்தே தீருவோம்!

## விமல் வீரவன்ஸ

கொழும்பு, நவ. 17

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிப்போம் - என்று 'உத்தர லங்கா சபாகய' வின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

2023ஆம்

15

# வரி செலுத்துவோர் 3 இலட்சம் பேரே!

கொழும்பு, நவ. 17

நாட்டில் வரி செலுத்துவோர் சுமார் 3 இலட்சம் பேர் மட்டுமே. இது நாட்டின் சனத்தொகையில் 1.33 வீதமாகும். எனவே, வரி தளத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று நிதி அமைச்சின் வரி கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்துள்ளார்.

பெருநிறுவன துறையில்கூட 10வீதம் மட்டுமே வரி செலுத்துகின்றன. வரி வருவாயை அதிகரிக்க அரசாங்கம் விரும்புகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

# பாரம்பரிய அரசியலிலிருந்து விலகி பிரச்னை தீர்வுக்காக இணையுங்கள்!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன அழைப்பு

கொழும்பு, நவ. 17

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாரம்பரிய அரசியலில் இருந்து விலகி நாடு எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டுக்

15

# மூன்று புகலிடக் கோரிக்கையாளரை ருவாண்டாவுக்கு அனுப்பும் பிரிட்டன்!

லண்டன், நவ. 17

பிரித்தானியாவுக்கு சொந்தமான இந்து சமுத்திரத்திலுள்ள டியாகோ கார்சியா தீவில் சிக்கியுள்ள இலங்கையின் புகலிடக் கோரிக்கையாளர்களினல் மூவர் ருவாண்டாவுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர் என்று பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் தெரிவித்துள்ளது.

2021 ஒக்ரோபர் தொடக்கம் 5 படகுகளில் 200 இலங்கையர்கள் டியாகோ கார்சியாவை வந்தடைந்தனர். இவர்களில் பலர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். சிலர் பிரான்ஸூக்கு சொந்தமான ரியூனியன் தீவுக்குச் சென்றனர்.

15

## இப்படியும் நடக்கிறது...!

அந்தக் காலத்தில் தமிழ்த் திரைப்படங்களில் பெரிய முதலாளி ஒருவரே வில்லனாக இருப்பார். அவரது தொழில் சாலையில் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டோ அல்லது போனஸ் கேட்டோ அடிக்கடி போராட்டம் நடத்துவார்கள். வேலை நிறுத்தம் செய்வார்கள்.

முதலாளி எப்படியாவது அந்த தொழில்சாலை தொழிலாளர் சங்கத்தின் தலைவரை விலைக்கு வாங்கி தொழிலாளர்களை சமாளிப்பார். அல்லது அந்த தொழில்சங்கத்தின் தலைவராக இருக்கும் கதாநாயகனை அந்த தொழிலாளர்களே வெறுக்கும் வகையில் ஏதாவது தில்லுமுல்லுச் செய்வார்.

அல்லது தனக்கு வேண்டிய ஒருவரையே தலைவராக்கி விடுவார். அவர் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதுபோல நடித்துக்கொண்டு முதலாளியின் நலன்களைக் கவனித்துக்கொண்டிருப்பார்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் எப்போதுமே இப்படித்தான் செய்வார்கள். அது ஓர் அரசாங்கம், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி அல்லது பெரும்பான்மை ஆளும் வர்க்கம் சிறுபான்மை இனமாக இருந்தாலும் இதைத்தான் செய்வார்கள்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கு சிங்கள பெரும்பான்மை அதைத்தான் அன்று முதல் இன்று வரை செய்துகொண்டிருக்கின்றது.

இன்று தமிழ் மக்களின் தலைமை என்பது கூட்டமைப்பு தலைவர் என்ற வகையில் இரா. சம்பந்தனிடமே இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். அவர் தமிழ் மக்களின் நலன்களை அடைவதற்காக ஏதாவது செய்தரா என்பதற்கு அப்பால், அவர் தமிழ் மக்களின் உரிமைகளை தனது காலத்தில் பெற்றுவிடவேண்டும் என்று விரும்புகின்றார் என்பதை அவருடன் கூடவே பயணித்துக் கொண்டிருக்கின்ற பங்காளிக்கட்சி ஒன்றின் தலைவர் இந்த ஊர்க்குருவியிடம் அடிக்கடி கூறுவதுண்டு.

ஆனால், அவருக்கு பின்னர் தமிழர் தலைமையை ஏற்கப் போகின்றவர் யார் என்பது இதுவரை ஆருடம் சொல்லக் கூடிய ஒன்றாக இல்லை.

பாராளுமன்றத்தில் எப்போதுமே பாராளுமன்றத்துக்குப் பிரவேசித்த மூப்பின் அடிப்படிடையிலேயே காரியங்கள் கவனிக்கப்படுவது வழமை. ஆசனம் ஒதுக்கீட்டிலிருந்து பல விடயங்களுக்கு பாராளுமன்றத்தில் மூப்பின் அடிப்படையிலேயே விடயங்கள் முன்னெடுக்கப்படும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் இன்று சம்பந்தன் அவர்களே மூத்தவர். அவருக்குப் பிறகு பாராளுமன்றம் சென்ற உறுப்பினர் என்றால் ரெலோ உறுப்பினர் கோவிந்தம் கருணாகரனே (ஜனா) மூத்தவர். எண்பத்து ஒன்பதில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் அமிர்தலிங்கம் அவர்கள் கூட தோல்வி அடைய, வெற்றிபெற்றவர்களில் மிக இளவயதுக்காராக பாராளுமன்றம் சென்றவர். அப்போது அவருக்கு வயது இருபத்தி ஐந்து. ஆனால், அதன்பின்னர் நீண்ட காலம் பிரிட்டனில் வாழ்ந்த அவர் தாயகம் திரும்பி கடைசியாக நடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினரானார். பின்னர் கடந்த பாராளுமன்ற தேர்தலில் வென்று எம்.பியானார்.

அவருக்குப் பிறகு பாராளுமன்றம் சென்றவர் சித்தார்த்தன். அவரும் புளொட் சார்பில் வவுனியாவில் போட்டியிட்டு எம்.பியானவர். பின்னர் கூட்டமைப்பில் இணைந்து கொண்ட பின்னரே பதினைந்திலிருந்து எம்.பி.யாக இருக்கிறார்.

கூட்டமைப்பில் போட்டியிட்டு, நீண்டகாலம் எம்.பியாக இருப்பவர் செல்வம் அடைக்கலநாதன்.

பாராளுமன்ற சம்பிரதாயங்களின்படி கூட்டமைப்பில் சம்பந்தன் இல்லாத இடத்துக்கு அந்த இடத்தை நிரப்ப வேண்டியவர், ஜனா அல்லது சித்தார்த்தன் அவரும் இல்லையென்றால் செல்வம். அதற்குப் பின்னரே மற்றவர்களை பட்டியலிடமுடியும்.

ஆனால், கடந்த திங்களன்று பாராளுன்றத்தில் வரவு - செலவுத் திட்ட சமர்ப்பிப்பின் பின்னர் நடந்த தேநீர் விருந்துபசாரத்தில் வழக்கமாக சம்பந்தன் அமரும் இடத்தில் அவர் இல்லை என்பதால் வேறு ஒருவர் உட்கார வைக்கப்பட்டிருந்ததாக சிலர் பெருமைப்பட்டுக் கொள்கின்றார்கள்.

அவர்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. மேலே தமிழ் படங்களில் முதலாளி தனக்கு வேண்டியவரை தொழில்சங்கத் தலைவராக்குவது போன்றதுதான் இது.!

- ஊர்க்குருவி

# பலர் காணாமல் ஆக்கப்பட்டமையை அறிந்தே தலைமை பதவியை ஏற்றேன்!

## காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக தலைவர் 'பல்டி'

கொழும்பு, நவ. 17

பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளமையையும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விக்கான பதிலை நாடி அவர்களின் உறவினர்கள் காத்திருப்பதையும் நான் அறிந்ததன் காரணமாகவே காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்துக்கான தவிசாளராக எனது நியமனத்தை ஏற்றுக் கொண்டேன். இவ்வாறிருக்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் நான் கூறியதாக அண்மையில் வெளியான செய்திகள் தவறான முறையில் புரிந்துகொள்ளப்பட்ட வையாகவே இருக்கின்றன - அவற்றை முற்றாக மறுக்கின்றேன் என்று காணாமல் ஆக்கப்ப்டோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில்,

"இந்த நாட்டில் காணாமல் போனோர் மற்றும் காணாமலாக் கப்பட்டோர் எவருமில்லை", "தமிழினப்படுகொலை இடம் பெறவில்லை. மாறாக 2009 ஆம் ஆண்டு வன்செயலின் போது பொதுமக்கள் 60,000 பேரை இராணுவம் மீட்டுள்ளது. அந்த வன்செயலே படுகொலை என்று சாயம் பூசப் பட்டுள்ளது", "சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் இல்லை. அதேபோன்று காணாமலாக்கப்பட்டவர்களுள் பெரும்பான்மையானோர் புலிகளால் அல்லது அவர்களுக்கு எதிரான குழுக்களால் கடத்தப்பட்டவர்களாவர்", "காணாமல்போனோர் பற்றிய சுமார் 50 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டபோது அவர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்துவருவது கண்டறியப் பட்டுள்ளது" என்று நான் கூறியதாக அண்மையகாலங்களில் ஊடகங்களில் வெளியான அனைத்து செய்திகளையும் மறுக்கின்றேன்.

நபர்கள் காணாமல்போயிருப்பதையும், அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விக்கான பதிலை நாடி அவர்களது உறவினர்கள் காத்திருப்பதையும் நான் அறிந்ததன் காரணமாகவே காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்திற்கான எனது நியமனத்தை ஏற்றுக்கொண்டேன். காணாமல்போனோர் பற்றிய ஆதாரங்களை அடுத்தடுத்து இயங்கிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் பதிவுசெய்திருக்கின்றன என்பதை நான் அறிவேன். அவ்வாறிருக்கையில் என்னை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்கள் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவையாகவும், தவறான முறையில் விளக்கமளிக்கப்பட்டவையாகவுமே இருக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு கடந்த 8 மாதங்களில் 1,549 முறைப்பாடுகள் தொடர்பில் எமது அலுவலகம் ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டிருப்பதுடன் அடுத்த வருட இறுதிக்குள் 4,500 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் உத்தேசித்துள்ளது.

இந்த விசாரணைகளின் முடிவில், கண்டறியப்பட்ட உண்மைகளுடன்கூடிய விரிவான அறிக்கை வெளியிடப்படும். அதேவேளை காணாமல்போனோரின் குடும்பங்களுக்கான ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை 2 இலட்சம் ரூபாயாக அதிகரிக்குமாறு காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றுள்ளது. (ஐ)

# மருதங்கேணி மருத்துவமனைக்கு மருத்துவபொருட்கள் அன்பளிப்பு!



வடமராட்சி, நவ. 17

இலங்கை தமிழ் அரசு கட்சி வாலிபர் முன்னணியால் வழங்கப்பட்ட நேற்று மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ பொருட்களை இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் வழங்கி வைத்தார்.

நேற்று பிற்பகல் 3 15 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் ச. அரியகுமார், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் சி.பிரசாத், கலந்து கொண்டனர்.

வழங்கப்பட்ட மருத்துவ பொருட்களை மருதஙகேணி பிரதேச மருத்துவ அதிகாரி மருத்துவர் தினகரன் தலைமையில் மருதங்கேணி பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரி செயலாளர் சின்னத்தம்பி பொன்னம்பலம், நலன்புரி சங்க பொருளாளர் வேலுப்பிள்ளை பிரசாந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (ஐ-02)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது"

- தமிழக கவிஞர் அறிவுமதி.

## மின்சார சபைக்கு 4,431 கோடி ரூபாய் நட்டமாம்

கொழும்பு, நவ. 17

இலங்கை மின்சார சபைக்கு, கடந்த மூன்று மாதங்களில் 4,431 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சபை வெளியிட்டுள்ள நிதி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜூலை முதல் செப்ரெம்பர் வரையிலான காலாண்டில் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் 2021ஆம் ஆண்டு 2,145 கோடி ரூபாய் நட்டத்தை சந்தித்துள்ளதாகவும் மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# கடவுச் சீட்டு கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 17

கடவுச்சீட்டு கட்டணத்தை இன்று வியாழக்கிழமை முதல் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய ஒருநாள் சேவை கட்டணம் 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாகவும் சாதாரண சேவை கட்டணம் 3,500 ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
17.11.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எவ்வாறு - யாரால் முடியும்?

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் அனைவரையும் சம்பந்தனின் இல்லத்துக்கு வருமாறு சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பு பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. ஆனால், கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் எவருக்கும் உத்தியோகபூர்வமான அழைப்பு விடுக்கப்படவில்லை. அவர்களும் பத்திரிகை வாசிக்கும் மக்கள் போன்றே செய்தியை வாசித்திருக்கின்றனர். கட்சிகளை சந்திக்க விரும்பினால் அதனை முறையாக செய்திருக்க முடியும். இவ்வாறு பத்திரிகைகளின் வாயிலாக அழைக்க வேண்டியதில்லை. கட்சிகளின் தலைவர்களோடு கலந்துரையாடி ஒரு திகதியை தீர்மானித்திருக்க முடியும். மேலும், சம்பந்தன் ஒரு கூட்டத்துக்கு அழைப்பதாக இருந்தால், அதனை அவரே செய்திருக்க வேண்டும். ஆனால், சம்பந்தனின் இல்லத்துக்கு வாருங்கள் என்றவாறு பொதுவானதோர் அறிவிப்பையே சுமந்திரன் வெளியிட்டிருந்தார். இந்த நிலையில், ஏனைய கட்சிகள் எவையுமே குறித்த சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை. இத்தனை அனுபவங்களுக்கு பின்னர் ஒரு கூட்டத்தை ஏகமனதாகக் கூட்ட முடியவில்லையென்றால் இவர்கள் சமஷ்டி தீர்வை பெற்றுத்தருவார்கள் என்பதை எவ்வாறு ஒரு சாதாரண தமிழ் குடிமகன் நம்ப முடியும்?

பொருளாதார நெருக்கடியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகளும் தென்னிலங்கை அரசியலை குழப்பியிருக்கின்றது. இந்த நிலையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களை எந்தவொரு கட்சியும் தனித்து எதிர்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சூழலை குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையில் எதிர்கொள்வதற்கான அரசியல் தந்திரோபாயம் தமிழ்த் தேசிய கட்சிகள் என்போரிடம் இருக்க வேண்டும். இது தொடர்பில் முன்னைய தலையங்கங்களிலும் நாம் வலியுறுத்திருக்கின்றோம். ஆனால், தமிழ் தேசியவாத கட்சிகளின் தலைவர்களுக்கு கருத்துச் சொல்வது செவிப்புலனற்ற ஒருவரின் காதில் சங்கூதுவது போன்றாகிவிட்டது. நீங்கள் என்னதான் கூறினாலும் நாங்கள் செய்வதைத்தான் செய்வோம் - உங்களால் முடிந்ததை பார்த்துக் கொள்ளுங்கள் என்பது போலவே தமிழ்த் தேசிய கட்சிகளின் செயல்பாடுகள் இருக்கின்றன.

அண்மையில் சம்பந்தன், கூட்டமைப்புக்குள் எந்தவொரு முரண்பாடும் இல்லையென்று தெரிவித்திருந்தார். ஆனால், அவ்வாறு கூறிய சில நாட்களிலேயே ஒரு கூட்டத்தை சரியாகக்கூட்ட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை ஏளனம் செய்வது போன்ற செயல்பாடுகளாலும் தன்னிச்சையான செயல்பாடுகளாலும்தான் கடந்த காலத்தில் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்த முரண்பாடுகளை தீர்ப்பது இயலாத காரியமும் அல்ல. ஆனால், முரண்பாடுகளை தீர்க்க வேண்டுமென்னும் கரிசனை எவரிடமும் இல்லை - முக்கியமாக தமிழ் அரசுக் கட்சியின் உயர்பீடத்திடம் இல்லை. இதற்கு தமிழ் அரசு கட்சியின் தலைமையின் இயலாமையும் ஒரு காரணமாகும்.

விடயங்களை ஆழமாக நோக்கினால் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ந்தும் குழப்ப நிலையொன்றுக்குள் இருக்க வேண்டுமென்றுதான் சிலர் விரும்புகின்றனரா - என்னும் கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஏனெனில், நடைபெறும் விடயங்களை நோக்கினால் அவ்வாறுதான் எண்ண வேண்டியிருக்கின்றது. தென்னிலங்கை பலவீனமாக இருக்கின்றபோது மட்டும்தான் அவர்கள் சில விடயங்களில் விட்டுக்கொடுக்க முன்வருவார்கள். இதுதான் இதுவரையான தென்னிலங்கையின் அரசியல் வரலாறாக இருக்கின்றது.

2015 ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, கூட்டமைப்பின் ஆதரவுடன் பயணிக்க வேண்டிய தேவை அன்றைய அரசாங்கத்துக்கு இருந்தது. அதனை பயன்படுத்தி சில விடயங்களை செய்திருக்க முடியும் ஆனால், வரமுடியாத அரசியல் யாப்புக்குப் பின்னால் சென்று நல்லதொரு வாய்ப்பை தவறவிட்டனர். கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்றியதைத் தொடர்ந்து அனைத்தும் பழைய நிலைக்கு சென்றன. இப்போது ராஜபக்ஷக்கள் வீழ்ச்சியடைந்திருக்கும் நிலையில் தென்னிலங்கையின் சிங்கள தேசியவாத தலைமை பின்னடைவை சந்தித்திருக்கும் சூழலில் அனைத்து தரப்புக்களையும் ஒன்றுபடுத்துவதற்குப் பதிலாக தேவையற்ற வகையில் விரிசல்களை ஏற்படுத்தும் வகையிலேயே செயல்பாடுகள் இடம்பெறுகின்றன. இந்தப் போக்கை தொடர்ந்தும் அனுமதித்துக் கொண்டிருக்கலாமா? முடியாதென்னும் பதில்தான் எல்லோரிடமும் உண்டு. ஆனால், இந்தத் தீய அரசியல் போக்கை எவ்வாறு மாற்றியமைப்பது? யாரால் மாற்றியமைக்க முடியும்?

# மாவீரர்களின் பெற்றோர் முல்லைத்தீவில் கௌரவிப்பு

*முல்லைத்தீவு, நவ. 17*



உடையார்கட்டு பிரதேச நினைவேந்தல் கட்டமைப்பின் ஒழுங்கமைப்பில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு மூங்கிலாறு மட்டு. - அம்பாறை மாவீரர் மண்டப வளாகத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன் சன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை நான்கு மாவீரர்களின் தாயாரும் எல்லைப்படை வீராங்கனையுமான ஜோசப் முனியம்மாவும் கடற்புலிகளின் முக்கிய போராளியுமான அச்சுதனும் இணைந்து ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஈகைச்சுடரை மூன்று மாவீரர்களின் சகோதரனும் நாட்டுப்பற்றாளரின் மகனும் முன்னாள் போராளியுமான வேலுப்பிள்ளை மாதவமேயரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர் அணி தலைவர் யூட்சனும் சமூக செயல்பாட்டாளர் உதயனும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். மலர் வணக்கத்தை முன்னாள் போராளியும் சமூக செயல்பாட்டாளருமான ரவி ஆரம்பித்து வைத்ததுடன் மாவீரர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் சமூக செயல்பாட்டாளர்களும் மலர்வணக்கம் செலுத்தினார்கள்.

நினைவுரைகளை வேலுப்பிள்ளை மாதவ மேயரும் கடற்புலிகளின் முக்கிய போராளியான அச்சுதனும் வழங்கினார்கள்.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களுக்கு பயன்தரு தென்னைமரக் கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

(ஐ)

# புதுக்குடியிருப்பு மலருக்கு ஆக்கங்கள் கோரல்

*முல்லைத்தீவு, நவ. 17*

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தால் பிரதேச வரலாறு, தொல்லியல், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலை, இலக்கியம், வழக்காறுகள், வாழ்க்கை முறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பிரதேச படைப்பாளிகளின் ஆக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக வெளியிடவுள்ள புதுவசந்தம் - 2022 பிரதேச மலருக்கான ஆக்கங்கள் புதுக்குடியிருப்பு பிர தேசத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள், எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தட்டச்சு செய்தோ, கையெழுத்துப் பிரதியாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் வவுனியாவில் சடலமாக மீட்பு

*வவுனியா, நவ. 17*

யாழ்ப்பாணத்தை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா கந்தன்குளம் காட்டுப் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மல்லாகத்தை சேர்ந்த அச்சுதநாயகர் ஜெயந்தகுமார் (48 வயது) என்பவராவார்.

இவர், வவுனியா கந்தன் குளத்திலுள்ள தமது உறவினர் வீட்டில் கடந்த ஒரு வருடமாக தங்கியிருந்து அந்தக் காணியை பராமரித்து வருகிறார்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை முதல் அவரை காணவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் அவரின் சடலம் காட்டுப் பகுதியில் மீட்கப்பட்டது. சடலத்தின் அருகே நாட்டு துப்பாக்கி ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டது.

எனினும், இவரின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# சிறுமியுடன் வாழ்ந்த இளைஞர் கைதானர்!

*யாழ்ப்பாணம், நவ. 17*

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் 15 வயது சிறுமியுடன் குடும்பமாக வாழ்ந்த 22 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

அத்துடன், சிறுமியை மீட்ட பொலிஸார் அவரை மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்த்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

| | |
|---|---|
| நவம்பர் - 17 | வியாழக்கிழமை |
| சுபகிருது வருடம் - | கார்த்திகை 1 |
| நல்ல நேரம் : | 10.30 - 12.00 |
| ராகு காலம் : | 01.30 - 03.00 |
| திதி : | நவமி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
புதிய முயற்சி இன்று வேண்டாம். வரவு அதிகரிக்கும். மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். நிதி நிலை உயரும்.எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வர். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**இடபம்**
நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள்.குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். வீடு, மனை வாங்கும் சிந்தனை உண்டாகும். தடைகளைக் கடந்து செயல்படுவீர்கள்.

**மிதுனம்**
ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்ற செலவு செய்வீர்கள்.சொத்து வாங்கும் முயற்சி தள்ளிப்போகும். நீண்ட நாள் எண்ணம் பூர்த்தியாகும். வியாபாரத்தை விரிவுபடுத்த திட்டமிடுவீர்கள்.

**கடகம்**
நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தேவையற்ற சிந்தனை உண்டாகும். உறவினரால் நன்மை கிடைக்கும். எதிரி தொல்லை அதிகரிக்கும். குடும்பத்தினர் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள்.

**சிம்மம்**
வீண்செலவு அதிகரிக்கும். வரவு அதிகரித்தாலும் செலவு கையை மீறிச்செல்லும். செயலில் நிதானம் தேவை. வாகன வகையில் செலவு ஏற்படும். பயணத்தில் கவனமுடன் செயல்படுங்கள்.

**கன்னி**
எதிர்பார்ப்பு நிறைவேறும். கேட்ட இடத்தில் இருந்து உதவி கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். நெருக்கடி விலகும். இனிய சம்பவத்தால் மகிழ்வீர்கள்.கூட்டுத் தொழிலை விரிவு செய்வீர்கள்.

**துலாம்**
நண்பர்கள் உதவுவர். ஆனாலும் கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பாலினத்தால் நன்மை காண்பீர்கள்.வியாபாரத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். திறமை வெளிப்படும்.

**விருட்சிகம்**
அறிவாற்றல் வெளிப்படும். எதிர்பார்த்த வருமானம் வரும். நன்மையான நாள். தந்தைவழி உறவுகளால் எண்ணம் நிறைவேறும். பிள்ளைகளின் வளர்ச்சிக்காக பாடுபடுவீர்கள்.முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**தனுசு**
எதிரியின் கை மேலோங்கும்.சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகும்.புதிய முயற்சி நிறைவேறாமல் போகும். பொருளாதார நெருக்கடியால் சிரமம் உண்டாகும்.

**மகரம்**
குழப்பம் விலகும். உங்களுக்கு எதிரானவர்களை அடையாளம் காண்பீர்கள். செலவிற்கேற்ப வரவு வரும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவிக்குள் இருந்த பிரச்னை விலகும்.

**கும்பம்**
செயலில் வெற்றி காண்பீர்கள். வாழ்க்கைத் துணையின் வழியே எண்ணம் நிறைவேறும். எதிரிகளின் செயலை முறியடிப்பீர்கள்.முயற்சிகள் நிறைவேறும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவர்.

**மீனம்**
அவசர வேலையால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வர்.வேலைப்பளுவால் உடலும் மனமும் சோர்வடையும்.எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். நெருக்கடி உண்டாகும்.

# அமெரிக்க பல்கலையில் தமிழ் இருக்கை அமைக்க நிதியுதவி!

சென்னை, நவ. 17

அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக இரண்டரை கோடி இந்திய ரூபாய்க்கான (நம் நாட்டு மதிப்பில் 11.4 கோடி ரூபாய்) காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ் மொழியின் சிறப்பை பரப்பும் நோக்கில் உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவ தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது.

அந்தவகையில் கடந்த 50 ஆண்டுகளாக தமிழ்ப் பண்பாட்டை போற்றி பாதுகாத்துவரும் அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ், இலக்கிய, பண்பாடு மற்றும் பொருளாதாரம் சார்ந்த திறனாற்றல் குறித்த ஆராய்ச்சிக்காக தமிழ் இருக்கையை நிறுவ அந்த பல்கலைக்கழகத்துடன் ஹூஸ்டன் தமிழ் ஆய்வுகள் இருக்கை அமைப்பு ஒப்பந்தம் செய்தது.

இதற்கு நிதியுதவி அளிக்க ஹூஸ்டன் தமிழ் ஆய்வுகள் இருக்கை அமைப்பு தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தது. இதன்படி அவர் இரண்டரை கோடி இந்திய ரூபாயை - 3 இலட்சம் டொலர்களை வழங்கினார்.

(ஐ)

# காங்கிரஸ் கட்சியினருக்குள் மோதலில் மூவர் படுகாயம்!



சென்னை, நவ. 17

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக கட்சி நிர்வாகிகளுடன் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தின் போது, இருதரப்பினர் மோதலில் ஈடுபட்டனர். இதில் 3 பேர் காயம் அடைந்தனர்.

நேற்று முன்தினம் காங்கிரஸ் தலைமையகமான சத்தியமூர்த்தி பவனில் நடந்த இந்தக்கூட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் தொடர்பில் விரிவாக ஆராயப் பட்டது.

இதனிடையே, கூட்ட இடத்துக்கு வந்த 500இற்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சியினர் கூட்டத்தை முற்றுகையிட்டனர். 3 வட்டார செயலாளர்களை மாற்ற வேண்டும் என்று கோரியே அவர்கள் இந்த முற்றுகையை நடத்தினர்.

இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. பிரச்னை குறித்து முறையாக விசாரிக்கப் படும் எனகூறி அவர்களை அழகிரி சமாதானப்படுத்தினார். ஆனாலும், அவர்கள் தொடர்ந்து கோஷம் எழுப்பியபடி இருந்தனர். இதையடுத்து, அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர். ஆலோசனைக் கூட்டம் முடிந்ததும் அங்கிருந்து புறப்பட்ட கே.எஸ்.அழகிரியை காங்கிரஸார் மீண்டும் முற்றுகையிட்டனர்.

இதன்போது, இரு பிரிவினரிடையே மோதல் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் கட்டையால் தாக்கினர். இதில் மூவர் காயங்களுக்கு இலக்காகினர். எனினும், சண்டையை பொலிஸார் கட்டுக்குள் கொண்டுவந்தமையை அடுத்து நிலைமை சுமுகமானது.

(ஐ)

# தமிழகத்தில் நடப்பது மக்கள் விரோத ஆட்சி

## அ.தி.மு.க. கட்சி சாடல்

கடலூர், நவ. 17

“தமிழகத்தில் மக்கள்விரோத ஆட்சி முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடந்துகொண்டிருக்கிறது. ஏழைகள் எப்போதெல்லாம் பாதிக்கப்படுகிறார்களோ அப்போதெல்லாம் அ. தி. மு. க. உங்களுக்கு துணை நிற்கும், சேவை செய்யும்” என்று சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பபாடி பழனிசாமி கூறியுள்ளார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் பகுதியை நேற்று சென்று பார்வையிட்ட பின்னர் உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், “அம்மா இருசக்கர வாகன திட்டம் உள்ளிட்ட அ. தி. மு. க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட எண்ணற்ற திட்டங்களை இந்த அரசு கைவிட்டுவிட்டது. அதேபோல் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டமும் அப்படித்தான். இன்றைக்கு ஒரு பவுண் 38 முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண் திருமண வயதை எட்டும்போது, பொருளாதார நிலையின் காரணமாக திருமணம் தடைபடுகிறது. அதுபோல் யாரும் பாதிக்கப்படக்கூடாது என்று கொண்டுவரப்பட்ட திட்டம் கைவிடப்பட்டு விட்டது - என்றும் சொன்னார். (ஐ)

# 16 மாத தி.மு.க. ஆட்சியில் விலையுயர்வே சாதனை!

## பாரதிய ஜனதா கட்சி

சென்னை, நவ. 17

16 மாத கால தி. மு. க. ஆட்சியில் விலைவாசி உயர்வு மட்டுமே சாதனையாக உள்ளது என்று நேற்று நடத்திய ஈரோடில் ஆர்ப்பாட்டத்தில் தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தி.மு.க. ஆட்சியில் எல்லா பொருட்களின் விலையும் உயர்ந்து வருகிறது. கட்டுமானப் பொருட்கள் தொடங்கி, சொத்துவரி, குடிநீர், மின்சார கட்டணம், ஆவின் பொருட்கள் என அனைத்து பொருட்களின் விலையும் உயர்ந்து விட்டன. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. கடந்த 16 மாத கால தி.மு.க. ஆட்சியில் விலை உயர்வு மட்டுமே சாதனையாக உள்ளது.

கோவையில் நடந்தது தற்கொலைப்படை தாக்குதல் என பா.ஜ.க. சொன்னது. அதனை என்.ஐ.ஏ. உறுதிப்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் தமிழக டி.ஜி.பியையும் பொய் பேச வைத்துள்ளது. எத்தனை நாளுக்குத்தான் இந்த ஏமாற்றுவேலையை பார்த்துக் கொண்டு இருப்பது? வரும் மக்களவை தேர்தலின் போது, தமிழகம் இந்த மாயையில் இருந்து வெளியேறி, தேசியத்தின் பக்கம் நிற்கும் -என்றார். (ஐ)

# ஜனாதிபதி ரணிலின் இனப் பிரச்னை தீர்வுக்கான பேச்சு அழைப்பு நாடகம்!

## கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, நவ. 17

இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமில்லை என 2021இல் கூறிய ரணில் விக்கிரமசிங்க தற்போது இனப்பிரச்னை தீர்வுக்கு காண்பதாகக்கூறி, தமிழ் தரப்பினரை பேச்சுக்கு அழைப்பது ஒரு நாடகமாகும் - இவ்வாறு சாடியுள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நாட்டில் ஒற்றையாட்சி முறையை கைவிட்டு சமஷ்டியை ஏற்படுத்துவதற்கான உத்தரவாதத்தை பெறாமல் எமக்குரிய பேரம் பேசும் சந்தர்ப்பத்தை இல்லாமல் ஆக்காதீர்கள் என்று கூறிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் ஒரே நிகழ்ச்சி நிரலில் பயணிக்கின்றனர் என்றும் சொன்னார்.

நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் இனப்பிரச்னைக்கான தீர்வை எட்டுவதற்காக வட, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளை ஒரே மேசையில் அமர்ந்து, பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமையன்று பாராளுமன்றில் வைத்து அழைப்பை விடுத்திருந்தார்.

ஐ. தே. க. சார்பில் தேசிய பட்டியல் ஊடாகக் கிடைத்த ஒரேயொரு ஆசனத்தை பெற்று பாராளுமன்றம் வந்திருந்த போது, இலங்கையில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவது நடைமுறைக்கு சாத்திமில்லை என அப்போது ரணில் விக்கிரமசிங்க என்னிடம் தெரிவித்திருந்தார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு, சர்வதேசத்திடமிருந்து நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஆதரவு வழங்குகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்துவதற்காக, நல்லாட்சி அரசாங்கத்திடம் பேரம் பேசக்கூடிய மக்கள் ஆணையை எமக்கு பெற்றுத் தாருங்கள் என வட கிழக்கு தமிழ் மக்களிடம் கேட்டுக்கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அந்த ஆணைக்கு மாறாக ஒற்றையாட்சிக்கு இணங்கிருந்தனர்.

அன்று இறுதி சந்தர்ப்பமொன்றை வழங்குமாறு வட, கிழக்கு மக்களிடம் வாக்குகளை கேட்டுக்கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினர், எந்தவித பேரமும் பேசாமல் ஜனாதிபதியுடன் பேச்சில் கலந்துகொள்ளவுள்ளமை அன்று போலவே இன்றும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற செயலாகும். இலங்கை தீவில் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய இன நல்லிணக்கத்திற்கான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுவதற்கு சமஷ்டியை ஒரே வழியாகும் " என்றும் கூறினார். (ஐ)



# கண்டாவளை மருத்துவ அதிகாரியை இடமாற்றுமாறு கோரி போராட்டம்!

கிளிநொச்சி, நவ. 17

கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரியை இடமாற்றக் கோரி கர்ப்பவதி தாய்மார்கள், பொதுமக்கள் எனப் பலர் ஒன்றுகூடி நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை முன்பாக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது "மதுபோதை பாவித்து விட்டு மருத்துவம் பார்க்காதே", "மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களை அவமதிக்காதே", "வெளியேறு வெளியேறு விடுதியை விட்டு வெளியேறு", "சீரழிக்காதே சீரழிக்காதே எமது சமூகத்தை சீரழிக்காதே" என்று எழுதப்பட்ட பல பதாகைகளை எழுதியிருந்ததுடன், அவற்றை கோஷங்களாகவும் எழுப்பினர்.

போராட்டம் நடைபெறும் இடத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் நிமால் வருகை தந்து போராட்டக்காரர்களின் கருத்துகளை செவிமடுத்ததுடன், இனி இதுபோன்ற பிரச்னைகள் இடம்பெறாது என்று உறுதியளித்தார். இதையடுத்து, போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஐ)

# 61 வர்த்தகர்கள் மீது நடவடிக்கை ரூ. பதினான்கரை இலட்சம் தண்டம்!

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணத்தில் வர்த்தக விதிமுறைகளை மீறிய 61 வர்த்தகர்களுக்கு எதிராக ஒக்ரோபர் மாதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், அவர்களுக்கு 14 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை பொறுப்பதிகாரி விஜிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின்நடவடிக்கைகளிலேயே இந்த 61 பேருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மேலும், பொருட்களின் விலையை காட்சிப்படுத்தாமை, குறிக்கப்பட்ட - கட்டுப்பாட்டு விலையை மீறி பொருட்களை விற்றமை, ஏமாற்றும் நோக்கில் பொருட்களின் விலைகளை மாற்றி விற்பனை செய்தமை, நிறை குறைந்த பாண் விற்பனை - உற்பத்தி செய்தமை போன்ற குற்றங்களுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், யாழ். மாவட்ட வர்த்தகர்கள் பொறுப்புணர்வுடன் தமது வியாபாரத்தை முன்னெடுக்குமாறும். பாவனையாளர் அதிகார சபைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அறிவுறுத்தினார். (ஐ-03)

# போதைப் பொருள் கைதிகளை சிறையில் பார்வையிட்ட ஆளுநர்!

யாழ்ப்பாணம், நவ. 17

நேற்று யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராசா திடீரென சென்றார். போதைப் பொருளோடு தொடர்புடைய கைதிகளைப் பார்வையிடவே சிறைச்சாலைக்கு வந்ததாக இதன்போது அவர் கூறினார்.

சிறைச்சாலைக்கு சென்ற பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், யாழ்ப்பாண சிறைச்சாலையில் போதைப்பொருட்களோடு கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 38 கைதிகளை சந்தித்து கலந்துரையாடினேன். குறிப்பாக அவர்கள் ஏன் இந்த போதை பொருளை பாவித்தார்கள் என்ன போதைப் பொருளை பாவித்தார்கள் போன்ற விடயங்களை அறிந்து கொண்டேன்.



அத்துடன், மேலும் அவர்கள் இங்கிருந்து விடுதலையாகி சென்ற பின்பும் போதைப் பொருளுக்கு மீண்டும் அடிமையாகாதவாறு ஏதாவது ஒரு வாழ்வியலை மேம்படுத்தும் ஒரு வேலை திட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. அந்த வேலை திட்டத்தை நாங்கள் விரைவாக ஆரம்பிக்க வேண்டும்.

போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்டு கைது செய்யப்படும் நபர் 3 தொடக்கம் ஆறு மாதங்களாவது சிறைச்சாலையில் இருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே, அவ்வாறான காலப்பகுதியில் அவர்கள் தங்கள் வாழ்வியலை முன்னோக்கி கொண்டு போகக்கூடிய சில வேலை திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நான் கலந்துரையாடினேன் - என்றார். (ஐ-03)

# வாகனங்களை வாடகைக்கு பெற்று அடகு வைக்கும் மோசடிகள் உயர்வு!

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணத்தில் வாகனங்களை வாடகைக்கு விடும் நிறுவனங்களிடமிருந்து வாடகைக்கு வாகனங்களைப் பெற்று அடகு வைக்கும் சம்பவங்கள் அண்மை நாட்களில் அதிகரித்துள்ளன என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறு 15இற்கும் மேற்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும், இதுவரை 4 வரையான முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடியில், கடந்த திங்கட்கிழமை 4 நாட்களுக்கு தேவை என்று வாடகைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வாகனம் ஒன்று 20 இலட்சம் ரூபாய்க்கு அடகு வைக்கப்பட்டுள்ளது என்று முறையிடப்பட்டுள்ளது.

எனவே, இது விடயத்தில் வாகனங்களை வாடகைக்கு விடுவோர் மற்றும் பொது மக்கள் விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ-03)

# மின் துண்டிப்புவேளையில் நடமாடிய இருவர் கைது!

வடமராட்சி, நவ. 17

பருத்தித்துறையில் நேற்றிரவு மின் துண்டிக்கப்பட்ட நேரத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையில் அண்மைக்காலமாக பெண்களுடன் சேட்டை விடும் மற்றும் துர்நடத்தை சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இவை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதனடிப்படையில் கடந்த கடந்த திங்கட்கிழமை பொலிஸார் நடத்திய விசேட நடவடிக்கையில் 14 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு மின் துண்டிக்கப்பட்ட வேளையில் பொலிஸார் விசேட நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போது, சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பியந்த அமரசிங்க தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பருத்தித்துறை பொலிஸாரின் இந்த நடவடிக்கைகள் பொது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. (ஐ-02 - 03)





# கடற்படைக்கு காணி சுவீகரிப்பு; பொதுமக்கள் கூடி கடும் எதிர்ப்பு!

முல்லைத்தீவு, நவ. 17

**முல்லைத்தீவு வட்டுவாகலில் அமைந்துள்ள "கோட்டாபய கடற்படை முகாமுக்காக 617 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் நில அளவீட்டு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்படவிருந்தது. இது தொடர்பில் அறிந்த காணி உரிமையாளர்கள் முகாம் முன்பு கூடி கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.**

வட்டுவாகலில் பொதுமக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியில் இந்த முகாம் அமைந்துள்ளது. இந்தக் காணியை தமக்காக சுவீகரிக்க கடற்படையினர் பல நடவடிக்கைகளை எடுத்தனர். இவற்றுக்கு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டனர்.

தமது பூர்வீக காணிகளை அரசாங்கம் தங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் தமது சொந்த நிலத்தில் வாழவே விரும்புவதாகவும் இழப்பீடோ அல்லது மாற்றுக் காணிகளோ தமக்கு வேண்டாம் என்றும் இதன்போது போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எனினும், நேற்று காணி அளவீட்டுக்காக எவரும் வருகை தரவில்லை. இந்நிலையில், காணி அளவீடு குறித்து இரகசியமாக நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படுகிறதா என்றும் போராட்டக்காரர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

இந்தப் போராட்டத்தல், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் காணி உரிமையாளர்களோடு இணைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதுகாப்புக்கான ஒதுக்கீடுகளை த. தே. கூட்டமைப்பு எதிர்க்கும்!

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

வரவு - செலவு திட்டத்தில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கவுள்ளதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.



நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஒதுக்கீடு தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே பாதுகாப்பு ஒதுக்கீட்டிற்கு எதிராக வாக்களிப்போம். நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அடுத்த வருட வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை மீளாய்வு செய்ய வேண்டும்.

நாடு பாரிய உணவுப் பற்றாக்குறை மற்றும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் நேரத்தில், இதுபோன்ற

விடயங்களைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். உணவு பாதுகாப்பு பிரச்னைக்கு நிலையான நீண்டகால தீர்வுகளை இரு அமைச்சுகளாலும் வழங்க முடியும். எனினும் விவசாயம் மற்றும் மீன்பிடி அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படவில்லை - என்றார். (ஐ)

**உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்**

துயர் நெற்
THUYAR.NET

**துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்**

ஈழநாடு
Eelanadu

**ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்**
**யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்**

DAN NEWS

**டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்**

விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# பதுக்கி வைத்த கோடாவுடன் சங்கானையில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 17

பதுக்கி வைக்கப்பட்ட 150 லீற்றர் கோடாவுடன் சங்கானையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்நிலையில், நேற்று யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரின் கீழ் செயல்படும் புலனாய்வு பிரிவினரால் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் சேகரித்த புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் சங்கானையில் சந்தேகநபரின் வீடு சோதனையிடப்பட்டது. இதன்போது வீட்டின் பின்புறமாக புதைத்து வைக்கப்பட்ட 150 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது. அத்துடன், 35 வயது நபரும் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் மானிப்பாய் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ-03)

# ஜனாதிபதி ரணிலுடன் மன்னார் ஆயர் சந்திப்பு



கொழும்பு, நவ. 17

மன்னார் ஆயர் பிடலின் லயனல் இமானுவேல் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் நேற்று புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரின் அலுவலகத்தில் சந்தித்தனர்.

மன்னார் பிரதேசத்தில் நிலவிவரும் காணிப் பிரச்னைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறப்பட்டது. அது தொடர்பில் கவனம் செலுத்திய ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகத் உறுதியளித்தார்.

மேலும், மடு யாத்திரைக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்வது தொடர்பிலும் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்புகள் தமது பிரச்னையை தீர்க்க வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை



யாழ்ப்பாணம், நவ. 17

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதற்கான சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில், தமிழ் அரசியல் தரப்புக்கள் தம்மிடையேயான முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கடற்றொழில் அமைச்சர் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில், கொள்கை ரீதியான உடன்பாடுகள் ஏதுமின்றி, தேர்தல் வெற்றிகளை இலக்காகக் கொண்டே கட்சிகள் இணைந்திருக்கின்றன என்பது வெளிப்படையானது. எனினும், கடந்த காலங்களில் தலைமைக்கான போட்டிகளும், அதனால் உருவாகிய முரண்பாடுகளுமே தமிழ் மக்கள் சார்பில் முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டங்களும் ஆயுதப் போராட்டமும் வலுவிழந்து போனமைக்கான பிரதான காரணமாக அமைந்திருந்ததுடன், கிடைத்த சந்தர்ப்பங்கள் பல கைநழுவிப் போவதற்கும் காரணமாக இருந்தது.

எனவே, தற்போது உருவாகியுள்ள சூழலையும் தவறவிடாது பயன்படுத்திக் கொள்வதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், காலத்தை வீணடிக்காது விட்டுக்கொடுப்புகளின் மூலம் தமக்கு உள்ளே இருக்கின்ற பிரச்னைகளையும், தமக்கு இடையிலான பிரச்னைகளையும் தீர்த்துக்கொண்டு முன்னோக்கி நகர வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# பயங்கரவாத சட்டத்தை நீக்குவதற்கு தூதரகங்கள் தலையிட வேண்டும்!

## மனித உரிமை செயல்பாட்டாளர்கள் வலியுறுத்து

கொழும்பு, நவ. 16

**பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுவது மற்றும் வசந்த முதலிகே கல்வேல சிறீ தம்ம தேரர் விடுதலை ஆகிய விடயங்களில் நாட்டிலுள்ள இராஜதந்திர தூதரகங்கள் மற்றும் அலுவலகங்கள் தலையிடவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள மனித உரிமை செயல்பாட்டாளர்கள் இது தொடர்பான கடிதங்களை தூதரகங்களிடம் கையளித்துள்ளனர்.**

அத்துடன், வசந்த முதலிகேயும் சிறீ தம்மதேரரும் மனிதாபிமானமற்ற நிலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என தமது கடிதத்தில் தெரிவித்துள்ள மனித உரிமை செயல்பாட்டாளர்கள் அவர்கள் சுகாதாரமற்ற இடத்தில் பாதுகாப்பற்ற இடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் இதனால் அவர்களின் உயிருக்கு பாதிப்பு ஏற்படலாம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவ தலைவர்கள் மற்றும் செயல்பாட்டாளர்களுக்கு எதிரான இந்த இலக்கு வைக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கு எதிராக குரல்கொடுக்குமாறு நாங்கள் சர்வதேச சமூகத்தை கேட்டுக்கொள்கின்றோம். 90 நாட்கள் தடுத்துவைக்கப்படுவதற்கான உத்தரவை மேலும் நீடிக்ககூடாது எனவும் குரல்கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் எனவும் மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை நிறுத்துவது என சர்வதே சமூகத்திற்கு வாக்குறுதியளிககப்பட்டுள்ள போதிலும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக மிகவும் பயங்கரமான பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவது குறித்து நாங்கள் அச்சமடைந்துள்ளோம் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஹிருணிகா மீதான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, நவ. 16

இளைஞர் ஒருவரை கடத்திச் சென்று தடுத்து வைத்து சித்திரவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிறேமசந்திரவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் விசாரணையை எதிவரும் ஜனவரி 30ஆம் திகதிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது பிரதிவாதி ஹிருணிகா பிறேமசந்திர சார்பில் மன்றில் தோன்றி சட்டத்தரணி அஷான் பெர்னாண்டோ, இந்த வழக்கு தொடர்பான இரண்டு காணொலி ஆதாரங்களை முன்வைக்கத் தயாராக இருப்பதாகவும், காணொலி ஆதாரங்களின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்ய கால அவகாசம் தேவை என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதையடுத்தே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# செவித்திறன் குறைபாடுள்ளோருக்கு சாரதி அனுமதி வழங்கல் ஆரம்பம்!

கொழும்பு, நவ. 16

முழுமையான செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் முன்னோடி திட்டம் நேற்று புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அநுரத்த தெரிவித்துள்ளார்.

இலங்கை செவித்திறன் குறைபாடுள்ளோர் மத்திய சம்மேளனம் சுமார் 40 வருடங்களாக முன்வைத்த கோரிக்கைக்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதன் முதலாவது வேலைத்திட்டம் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த முன்னோடி வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தின்படி, செவித்திறன் குறைபாடுள்ளோர் சம்மேளனத்தில் நாடளாவிய ரீதியில் அங்கம் வகிக்கும் சுமார் 3 இலட்சம் பேர் எதிர்காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ஐ)

# மகனை வழியனுப்பி திரும்பிய தாயார் விபத்தில் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 17

வெளிநாடு சென்ற மகனை வழியனுப்பிவிட்டு திரும்பிய தாய் விபத்தில் மரணமடைந்தார். அத்துடன், 11 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று காலை களுத்துறை - மதுகம- மீகஹதென்ன கல்முல்ல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண், வெளிநாடு சென்ற மகனை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வழியனுப்பி விட்டு, உறவினர்களுடன் வானில் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால், வீதியை விட்டு விலகி, வான் விபத்துக்கு உள்ளானதாக முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது. (ஐ)

# கோட்டாபயவை கொல்வதற்கு ஜூன் 9 சதித் திட்டம் நடந்தது!

## விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, நவ. 17

கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதி கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் நுழைந்த போது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டதாக உத்தர லங்கா கூட்டணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு முன்னர், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் காப்பாற்றுமாறு தாம் இறைவனிடம் பிரார்த்தித்தார் என்றும் இதன் இறுதி விளைவு முன்னாள் ஜனாதிபதியை கொலை செய்வதாகும் எனவும் விமல் வீரவன்ஸ கூறினார்.

மேலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் மாளிகைக்குள் நுழையும் வரை முன்னாள் ஜனாதிபதிக்கு அந்த விடயம் தெரியாது. அத்துடன், ஜனாதிபதி மாளிகைக்குள் இருந்த பாதுகாப்புத் தலைவர் ஒருவர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் தவறான தகவலாக “நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது” என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், தற்செயலாக முன்னாள் ஜனாதிபதி தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை பார்த்தபோது, போராட்டக்காரர்கள் உள்ளே நுழைந் ததைக் கண்டார். அந்தத் தருணத்தி லேயே மாளிகையின் பாதுகாப்பு நிலைமை குறித்து அவர் அறிந்து கொண்டார்.



எனவே, லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கேர்ணல்கடாபி கொல்லப்பட்டமை போன்று கோட்டாபய ராஜபக்ஷவையும் கொல்லும் திட்டம் இருந்ததாகவும், அமெரிக்க தூதுவரின் பிரார்த்தனை கூட அந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.(ஐ)

# வவுனியா போதை புனர்வாழ்வு முகாமிலிருந்து ஐவர் தப்பினர்!

வவுனியா, நவ. 17

பூந்தோட்டம் போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து 5 பேர் தப்பியோடியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையில் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த புனர்வாழ்வு நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய தங்க வைக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்று வருகின்றனர். இவ்வாறு புனர்வாழ்வு பெறுவோரில் 5 பேரே தப்பியோடியுள்ளனர். விளையாட்டு பயிற்சியில் ஈடுபட்ட போதே குறித்த 5 பேரும் தப்பியோடினர் என்று தெரிய வருகிறது.

தப்பியோடிய அனைவரும் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள். இதை யடுத்து புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த இராணுவத்தினர் மற்றும் பொலிசார் இணைந்து அவர்களை மீள கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# 2,300 கோடி ரூபாய் நிலுவையால் மருந்து கொள்வனவில் நெருக்கடி!

கொழும்பு, நவ. 17

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான 2 ஆயிரத்து 300 கோடி ரூபாய் நிலுவையை விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அவர்களால் புதிய முன்பதிவுகளை ஏற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு ஏற்படுவதற்கு இதுவொரு பிரதான காரணம் என அவர் சுட்டிக்காட்டினார். நிலுவையை செலுத்துவதற்கான நிதியை உடனடியாகப் பெற்றுக்கொடுக்குமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# ஒரே இரவில் 4 ஆலயங்களில் திருடர்கள் கைவரிசை!

கண்டி, நவ. 17

கண்டி - கந்தானையில் ஒரே இரவில் நான்கு ஆலயங்கள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஐந்தாம் கட்டையில் உள்ள ஆஞ்சநேயர் ஆலயம், அம்மன் ஆலயம், நான்காம் கட்டையில் உள்ள அம்மன் ஆலயம், மூன்றாம் கட்டை இராமர் ஆலயத்திலும் திருடர்கள் கைவரிசை காட்டியுள்ளனர். இந்த நான்கு ஆலயங்களிலும் உள்ள பெறுமதியான தங்க தாலிக்கொடி மற்றும் உண்டியலில் உள்ள பணம் ஆலயத்தில் இருந்த அரிசி மூட்டைகள் போன்ற பொருட்களை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.(ஐ)

# தமிழ்நாட்டில் கனமழை:

## சென்னை உலகளாவிய கவனம் பெறுவது ஏன்?

க. சுபகுணம்



சென்னையில் 400-க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்த பேரழிவுகரமான வெள்ளப் பேரிடர் நிகழ்ந்து ஏழு ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த ஏழு ஆண்டுகளில் மழைப் பொழிவைக் கணிப்பது மேன்மேலும் கடினமாகி வருகிறது. அதைத் தாக்குப்பிடிக்கும் திறன் இந்த ஏழு ஆண்டுகளில் சென்னை பெருநகரத்திற்கு வந்துள்ளதா என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள வல்லுநர்களிடம் பேசினோம்.

சென்னை மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் சிவப்பு எச்சரிக்கை காரணமாக தொடர்ந்து பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. 1.2 கோடி மக்கள் வாழும் கடற்கரை நகரத்தின் தெருக்களிலும் வெள்ளம் சூழ்ந்த சாலைகளிலும் குடியிருப்புகளிலும் மழைநீர் தேங்கியிருப்பதைக் காண முடிகிறது. இனி வரும் நாட்களில் மேலும் கனமழை பெய்யும் என்பதால் அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நிலையில் இருக்கின்றனர்.

அக்டோபர் 31ஆம் திகதியன்று தொடங்கிய பருவமழைக்கு நடுவே நடந்த மழை தொடர்பான சம்பவங்களில் நவம்பர் 5 வரை தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 26 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மாநில பேரிடர் மேலாண்மை வாரியத்தின் தரவு கூறுகிறது.

மழை பெய்வது தீவிரமடைவது மட்டுமின்றி, முன்பு போல் கணிக்க முடியாத வகையிலும் உள்ளதாக வல்லுநர்கள் கூறுகின்றனர். மேலும் இதனால் அதிகாரிகள் விரைந்து செயலாற்றுவது கடினமாக இருப்பதாகக் கூறுகிறார் இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி ராக்சி மேத்யூ கோல்.

பொதுவாக, பருவமழையின் இடையிலும் இறுதியிலும் தான் சென்னை போன்ற நகரங்களில் வெள்ளநீர் தேங்குவது நிகழும். ஆனால், இந்த ஆண்டில் பருவமழை தொடங்கிய மூன்று நாட்களில் இருந்தே தமிழகத் தலைநகரின் சில இடங்களில் வெள்ள நீர் தேங்கத் தொடங்கிவிட்டது.

2021ஆம் ஆண்டு நவம்பர் தொடக்கத்தில் 3 நாட்களில் பெய்த சராசரி மழை அளவு 147.27மிமீ. இந்த ஆண்டின் நவம்பர் தொடக்கத்தில் பெய்த மூன்று நாள் மழை அளவு 205.63மிமீ.

“உலகிலுள்ள பெரும்பாலான நகரங்களில், குறிப்பாக இந்திய நகரங்களில் பருவநிலையைக் கணிப்பது தொடர்ந்து சவாலாகிக் கொண்டே வருகிறது. வானிலையைக் கணிப்பது சரியாக இருந்தால் முன்னறிவிப்பு செய்து எச்சரிக்க முடியும்.

ஆனால், காலையில் கணிப்பது மாலையில் மாறிவிடுகிறது. இந்தச் சிக்கல் வெப்பமண்டல நாடுகளில் அதிகமாகி வருகிறது. சென்னையைப் பொறுத்தவரை, பருவமழை தொடங்கிய 24 மணி நேரத்தில் 140மிமீ அளவிலான மழைப்பொழிவு நிகழும் என்று யாரும் கணிக்கவில்லை. அது எதிர்பாராத வானிலை நிகழ்வு,” என்கிறார் இடைநிலை நீர்வள ஆய்வுகளுக்கான தெற்காசிய கூட்டமைப்பின் தலைவர் முனைவர் எஸ். ஜனகராஜன்.

இந்த எதிர்பாராத கனமழையால் தண்ணீர் தேங்கியிருந்த பகுதிகளில் தமிழக அரசு மோட்டார் பம்புகளை வைத்து தண்ணீரை நீக்கியது. நிவாரணப் பணிகளுக்காக பேரிடர் மீட்புக் குழுக்களும் முகாம்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், “பருவமழையின் தொடக்கத்திலேயே குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் புகும் அளவுக்கு இருப்பதே சென்னையின் பேரிடர் பாதுகாப்பு நிலை எந்தளவுக்கு உள்ளது” என்பதைக் காட்டுவதாகக் கூறுகிறார் அறப்போர் இயக்கத்தைச் சேர்ந்த ஹாரிஸ் சுல்தான்.

காலநிலை சீராக இல்லாமல் ஒழுங்கற்றதாகி வருவதும் இதற்கு ஒரு காரணம் என்று கூறுகிறார் இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த காலநிலை விஞ்ஞானி முனைவர்.ராக்சி மேத்யூ கோல்.

அவர், “பருவமழை வடிவம் மிகவும் ஒழுங்கற்றதாகிவிட்டது. மேக வெடிப்புகள், கன மழை போன்றவை கணிக்க முடியாதவையாகி வருகின்றன.

இவற்றை முன்னறிவிப்பது ஒருபுறம் இருக்கட்டும், கண்காணிப்பதே சவாலானது. 2015ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட மேக வெடிப்புகள் பெரிய வெள்ளத்திற்கு வழிவகுத்தது அதற்கொரு சான்று. சமீபத்திய தசாப்தங்களில் இவை அடிக்கடி நடப்பதைக் காண்கிறோம்,” எனக் கூறுகிறார்.






### நகரக் கட்டமைப்பு எப்படியிருக்க வேண்டும்?

தென்னிந்திய நகரங்களில் மழைப்பொழிவு ஒழுங்கற்றதாக உள்ளது. ஒரு மாதம் பெய்ய வேண்டிய மழை அளவு ஒரே நாளில் பெய்து தீர்த்துவிட்டு நின்றுவிடுவது, வரலாறு காணாத அளவுக்கு மழைக்காலம் முழுவதும் கொட்டித் தீர்ப்பது என்று ஒழுங்கற்ற பொழிவை எதிர்கொண்டு வருகின்றன.

“மழைநீர் எங்கு பொழிகிறதோ அங்கேயே எவ்வளவு முடியுமோ அவ்வளவு சேகரித்து, சேமிக்க வேண்டும். அரசு, தனியார் என்று அனைத்து கட்டடங்களின் கூரைகளிலும் மழைநீரைப் பிடித்து நிலத்தடியில் சேகரிக்கும் கட்டமைப்பு வேண்டும். இதைச் செய்தால், வெள்ளத்திலிருந்து பாதுகாப்பான நகரமாக மட்டுமின்றி வறட்சியில் இருந்தும் சென்னை பாதுகாப்பாக இருக்கும்,” எனக் கூறுகிறார் பேராசிரியர் ஜனகராஜன்.

### தமிழகத் தலைநகரம் உலகளாவிய கவனம் பெறுவது ஏன்?

இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள சென்னை, கடல் மட்டத்தில் இருந்து தாழ்வான சமவெளியில் அமைந்துள்ளது. சென்னை காலநிலை மாற்ற விவாதங்களில் உலகளாவிய கவனம் பெறுவதற்கு அதன் நிலவியலும் ஒரு காரணம் என்கிறார் நீரியல் ஆய்வாளர் பேராசிரியர் ஜனகராஜன்.

மேலும், “சமீபத்திய ஐபிசிசி அறிக்கையில் ஆறு இடங்களில் சென்னையைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்குக் காரணம் நகரம் மொத்தமும் நிலவியல்ரீதியாக பேரிடர்களுக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய வகையில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 0 முதல் 5 மீட்டர் என்ற அளவில் தான் சென்னையின் பெரும்பான்மை பகுதிகள் உள்ளன. அதனால் தான் சென்னை உலகளாவிய கவனம் பெறுகிறது,” என்றார்.

ஐபிசிசி அறிக்கை கடல் மட்ட உயர்வால் இந்தியாவின் மும்பை, சென்னை ஆகிய நகரங்கள் மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகும் என்று எச்சரித்துள்ளது. பூமியின் சராசரி வெப்பநிலை உயர்வதால், நகரங்களின் உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் மிகப்பெரும் பேரழிவுகளைச் சந்திக்கவுள்ள நகரங்களில் சென்னையும் ஒன்று.

உலகளவில் 2050ஆம் ஆண்டுக்குள் மிகப்பெரிய அளவில் வெள்ள சேதங்களை எதிர்கொள்ளும் 20 கடலோர நகரங்களில் சென்னையும் ஒன்று.

உலகளவில் 3 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையுடைய நகரங்களில் 56 சதவீதம், சூறாவளி, வெள்ளம், வறட்சி, நிலநடுக்கம், நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு ஆகிய 6 பேரிடர்களில் ஏதேனும் ஒன்றிலாவது பாதிக்கப்படுகின்றன. சென்னை, நகோயா, டெஹ்ரான் ஆகிய பெருநகரங்கள் 80 லட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள்.

### தென்னிந்திய நகரங்களில் காலநிலையின் தாக்கம் இனி எப்படியிருக்கும்?

“பலவீனமான புயலில் இருந்து மிகக் கடுமையான சூறாவளியாக உருவாக இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை எடுத்துக் கொண்ட சூறாவளிகள், இப்போது ஒரே நாளுக்குள் தீவிரமடைந்து வருகின்றன. இது, முன்னறிவிப்பு செய்வது, பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவற்றுக்கு இனி மிகச் சொற்ப நேரத்தையே வழங்கும்,” என்கிறார் ராக்சி மேத்யூ கோல்.

நாம் நகரங்களை “மறுவடிவமைப்பு” செய்ய வேண்டும் என்கிறார் ராக்சி, “இப்போது காலநிலை மாற்றம், புயல்களின் தீவிரம் ஆகியவை நம் முன்னறிவிப்பு கட்டமைப்புகளுக்கு மேலதிக சவால்களைக் கொடுக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் முன்னறிவிப்புகளுக்காகக் காத்திருப்பதற்குப் பதிலாக, தீவிரமடைந்து வரும் புயல்கள், உயரும் கடல் மட்டங்களுக்கு ஏற்ப கடலோர சமூகங்களுக்கு உதவும் நீண்ட கால கொள்கைகளை நாம் வகுக்கவேண்டும்.” என்கிறார் ராக்சி. (பிபிசி)

# இலங்கையின் பொருளாதார நோயை சமாளிக்கும் ரணில் அரசபொருளியல்



அ. வரதராஜா பெருமாள்

பகுதி 3

## அன்று: டொலர் 185 ரூபா - தோட்டக்கூலி 1000 இன்று: டொலர் 370 ரூபா, கூலி இன்றும் ஆயிரமே!

9. தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபா சம்பளம் என்பதை உத்தியோகபூர்வமான கணக்குப்படி பார்த்தாலும் இந்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு முதலில் 5 அமெரிக்க டொலருக்கு சமமாகும். இப்போது அதே 1000 ரூபாவானது 3 அமெரிக்க டொலருக்கும் குறைவானதாகும். தேயிலை ஏற்றுமதியாளர்கள் இலங்கையின் நாணயப் பெறுமதியின் இறக்கத்திற்கு தொடர்பற்ற வகையில் ஏறத்தாழ முன்னைய டொலர் பெறுமதியின்படியே தேயிலைக்கான வருமானத்தைப் பெறுகின்றனர். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், கடந்த ஆறு மாதத்தில் கொழும்பு சந்தையில் அமெரிக்க டொலரின் பெறுமதியில் ஏற்றுமதிக்கான தேயிலையின் சராசரி விலையை கடந்த ஆண்டு நிலவிய விலையோடு ஒப்பிடும் போது சுமார் 20 சதவீதத்துக்கும் அதிகமாகவே விலை உயர்ந்திருக்கிறது. இலங்கை ரூபாயில் பார்த் தால் கடந்த மார்ச் மாதத்தில் 850 ரூபாயாக இருந்தது. ஆகஸ்டில் 1450 ரூபாவாக உயர்ந்திருக்கிறது (teasrilanka.org/tea-prices). ஆனால் அது தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கும் உரியதாக ஆக்கப்படவில்லை. உண்மையில் டொலர் பெறுமதியில் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தக் கூலி சுமார் 45 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கிறது. ஆயினும் தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் பக்கமிருந்து அது பற்றி குறிப்பிடத் தக்கதாக இன்னமும் சத்தமெதுவுமில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முந்தியதான 1000 ரூபா கூலி என்பதற்கு மேலாக அது நகரவில்லை.



சம்பளத்தை வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புக்கு ஏற்ப உயர்த்தும்படி தனியார் துறைகளுக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுத்தால் அரசாங்கமும் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதால் அரசாங்கம் அப்படி ஒரு விடயம் இருப்பதாகக் கூட காட்டிக் கொள்ளாமல் இருப்பதில் திறமையாக உள்ளது. மேலும் உழைப்பாளர்கள் சம்பள உயர்வு கேட்டுப் போராட்டங்களை நடத்தும் நோக்குடன் எவரும் முன் முயற்சிகளை எடுத்து விடாத வகையில் தேசிய பாதுகாப்பு, பொதுச் சொத்துக்களுக்கு பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு என அரசு தனது அனைத்து அடக்குமுறை, ஒடுக்குமுறை கருவிகளையும் முடுக்கிவிட்டு அரசியல் சமூக தலைவர்களை அமைதி காக்க வைத்துள்ளது. அத்துடன் அவ்வாறான போராட்டங்களை மக்கள் விரும்பாத மாதிரியான ஓர் எண்ண அலையையும் அரசாங்கம் விரித்து பரப்பியுள்ளது.

### வேலையின்மையும் வறுமையையும் இங்கு நியதியாக முன் நிற்கின்றது

10. ஆடை ஏற்றுமதி வருமானமும் தேயிலை ஏற்றுமதி வருமானமும் அரசுக்கு மிக முக்கியமானவை. எனவே அவற்றிற்குத் தேவையான மூலப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்களின் இறக்குமதியில் அரசாங்கம் தாராளமாகவே நடந்து கொள்கிறது. ஆனால் கட்டிடத் தேவைகளுக்கான பண்டங்களின் இறக்குமதி மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் உழைப்பாளர்களில் சுமார் 8 சதவீதமானோர் கட்டிடத் தொழிற் துறையோடு உள்ளவர்கள். கட்டிடப்பொருட்களின் தட்டுப்பாடுகளும் அதீத விலையேற்றமும் அத்துறையிலுள்ள அரைவாசிக்கு மேற்பட்டோரை வேலையற்றவர்களாக அல்லது போதிய நாட்களுக்கு வேலை கிடைக்காதவர்களாக ஆக்கியுள்ளது.

விவசாயத்துக்கான ரசாயன உரம் மற்றும் ரசாயனப் பொருட்கள் திறந்த சந்தையில் தட்டுப்பாடாகவும் மிக அதிக விலையிலுமே கிடைக்கிறது. முன்னர் விவசாயிகள் ஓர் ஏக்கர் நில நெல் விவசாயத்துக்கு 100 கிலோவுக்கும் அதிகமாக ரசாயன உரத்தை பிரயோகித்தனர். துல்லியமான முறையில் விவசாயம் செய்தாலும் ஓர் ஏக்கர் நெல்லுக்கு குறைந்த பட்சம் 60 கிலோ ரசாயன உரம் தேவையென அனுபவமுள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் அரசாங்கம் சென்ற வாரம் வரை 30 கிலோ யூரியாவை மட்டுமே கிலோ 200 ரூபா என்ற அடிப்படையில் வழங்குவதென செயற்பட்டுக் கொண்டிருந்தது. அதற்கு மேலாக தேவைப்பட்டால் விவசாயிகள் வெளிச்சந்தையில் 50கிலோ யூரியாவுக்கு ரூபா 20000க்கு மேல் கொடுத்து வாங்கட்டும் என இருந்தது. ஆனால் உரத்தை இறக்குமதி செய்வதற்கான அவசர உதவிகள் சில நாடுகளில் இருந்து கிடைத்தமையினால் இப்போது விவசாயிகளுக்கு நெல் பயிர் செய்கை பண்ணப்படும் ஓர் ஏக்கருக்கு அரசாங்கம் 50 தொடக்கம் 55 கிலோ யூரியாவை வழங்குவதற்கு ஆரம்பித்திருக்கிறது.

2019ம் ஆண்டோடு ஒப்பிடுகிற போது இலங்கை நாணயத்தில் அமெரிக்க டொலரின் பெறுமதி இரண்டு மடங்கே அதிகரித்துள்ளது. ஆனால் இறக்குமதி செய்யப்படும் உரத்தின் விலையோ 5 மடங்குக்கு மேல் அதிகமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சென்ற வருடமும் இந்த வருட முற்பகுதியிலும் விவசாயிகள் 50 கிலோ யூரியாவுக்கு 40000 ரூபா, 50000 ரூபா எனக் கொடுத்து வாங்க வேண்டியிருந்தது. இப்போது இந்த அளவுக்காவது குறைந்த விலைக்கு யூரியாவை வாங்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகளை அரசாங்கம் எண்ண வைத்திருக்கிறது. யூரியா தவிர்ந்த வேறு வகையான அவசியமான ரசாயனங்கள் கிடைக்கும் நிலை ஏற்படவில்லை. நெல் மற்றும் சோளம் தவிர்ந்த வேறெந்த உள்ளூர் உணவு உற்பத்திக்கும் எந்த வகையான உதவியையும் சலுகையையும் அரசாங்கம் வழங்குவதாக இல்லை.

அந்நிய செலாவணியின் தேவைக்காக ஆடை உற்பத்தித் தொழிலுக்குத் தேவையான இறக்குமதிகளை அரசாங்கம் வேண்டிய அளவு அனுமதித்திருந்தாலும் ஏனைய எந்தவொரு உள்ளூர் ஆக்க உற்பத்தித் தொழில்களுக்கு தேவையாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மிகுந்த தட்டுப்பாடாகவே உள்ளன, அத்துடன், அவை மிக உயர்ந்த விலையிலேயே கிடைக்கின்றன. அதனால் அரைவாசிக்கு மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டு விட்டன, உணவு விற்பனைக் கடைகளும் கணிசமாக மூடப்பட்டு விட்டன. சில்லறை விற்பனைக் கடைகளில் தொகை ரீதியில் பொருட்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

அடுத்தபடியாக இலங்கையின் முக்கிய தொழிலான மீன்பிடியானது அதற்கான எரி பொருட்கள் தட்டுப்பாட்டால் அதன் மொத்த உற்பத்தி பெரும் வீழ்ச்சி நிலையில் உள்ளது. அதே போல போக்குவரத்துத் துறையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. ஒட்டு மொத்தத்தில் மேற் குறிப்பிட்டுள்ள இத்துறைகளில் தங்கியிருந்த தொழிலாளர்களில் கணிசமான சதவீதத்தினர் வேலையிழந்தவர்களாக - வருமானம் இழந்தவர்களாக உள்ளனர்.

இதற்கெல்லாம் ஆட்சிக் கதிரைகளை நிரப்பியிருக்கிற அரசியல் வாதிகளோ, அல்லது கனவிலும் நினைவிலும் லஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளில் மட்டுமே தமது முழுக் கவனத்தையும் அக்கறையையும் செலுத்திக் கொண்டிருக்கிற அமைச்சர்களோ, அரச அதிகாரிகளோ அல்லது இன்றைய நிலைமைக்கு அரச தலைமைகளின் மோசடியான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளோ நடைமுறைகளோ அல்லது, சாதாரண மக்களிடையே நிலவும் அறியாமைகளையும் மூட நம்பிக்கைகளையும் இன, மத மற்றும் சாதி அடிப்படையிலான குறுகிய மனோபாவங்களையும் பயன்படுத்தும் முதலாளிகளும் பணக்காரர்களும் அதிகாரத்தில் இருப்போரும் சுரண்டல்களையும் சூறையாடல்களைம் சொத்துக் குவிப்புகளையும் மேற்கொள்வதற்கு வசதியாக பரந்து பட்ட மக்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வுகளையும் இயலாமைகளையும் பகைமைகளையும் பராமரிக்கின்ற மோசடித் தனமான முதலாளித்துவ கட்டமைப்போ காரணமல்ல என்பது போலவும், ஏதோ இயற்கைப் பேரழிவு போல திடீரென அந்நிய காரணங்களால் ஏற்பட்ட அந்நியச் செலாவணி பற்றாக்குறையேதான் காரணம் என்பது போன்றதுமான சமாதானத்தை பரந்து பட்ட பொதுமக்கள் மத்தியில் ஆட்சியாளர்கள் பாராயணம் செய்கிறார்கள்.

### இலங்கை ஆட்சியாளர்களின் புதிய பொருளாதார கோட்பாடு

11. அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் எரி பொருட்கள் உட்பட இறக்குமதிகள் பெரும்பாலும் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளன. அதனால் அவற்றின் விலைகள் உள்ளூர் சந்தையில் மூன்று மடங்குக்கு மேல் உள்ளன. இதனால் மக்கள் கொள்வனவுகளை கணிசமாக குறைத்துள்ளனர். அதனால் இப்போது மக்கள் பொருட்களை வாங்கத் தயாராக இருப்பதற்கும் (இது பொருளியல் மொழியில் “கேள்வி” எனப்படும்) பொருட்கள் சந்தையில் கிடைக்கும் தொகைரீதியான அளவுக்கும் (இது பொருளியல் மொழியில் “நிரம்பல்” அல்லது “வழங்கல்” எனப்படும்) இடையில் ஒரு சமநிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலை இயல்பாக ஏற்பட்டுள்ளதென்று இல்லை. மாறாக அரசின் செய்பாடுகளால் ஏற்பட்டிருக்கிறது. இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளினால் சந்தையில் பொருட்கள் கிடைப்பது குறைக்கப் பட்டமையாலும், அதனால் நாட்டில் உள்நாட்டு பொருளாதார உற்பத்தி களின் வீழ்ச்சி ஏற்பட்டமையாலும் எழுந்துள்ள ஒரு பொருளாதார நெருக் கடியை, கேள்விக்கும் நிரம்பலுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒரு சந்தைச் சமநிலை போல காட்சிப்படுத்தும் தந்திரத்தை அரசாங்கம் கெட்டித்தனமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. நாட்டு மக்களின் தேவைகளுக்கு இப்போது இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் அளவே போதும் என்றதொரு வகையான நிலைமையை அரசாங்கம் காட்சிப்படுத்தியுள்ளது.

இங்கு ஒரு சில அம்சங்கள் பொருளாதார மந்தம் என்னும் நோயின் குணங்கள் என்றாலும், மறுபக்கம் பொருட்களின் அதீத விலையேற்றம் அதற்கு எதிர்மாறாக உள்ளது. அரசின் செலவுகளை சமாளிக்க ஒரு பக்கம் அரசாங்கம் பணத்தை அச்சிட்டு நாட்டுக்குள் நடமாட விடுகிறது. மறுபக்கமாக அரசாங்கம் வங்கிகளின் வட்டி வீதத்தைக் கூட்டி நாட்டில் சுற்றோட்டத்தில் உள்ள பணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அதேவேளை வரிகளை அதிகரிக்கிறது. அதனால் விலைகள் மேலும் உயரும். இறக்குமதிகளை தேவையான அளவு மேற்கொள்ளாமல் தேசிய உற்பத்திகளின் அளவை பழைய நிலைக்குக் கொண்டு செல்ல முடியாது. அது ஏற்படாவிட்டால் வேலையின்மை தொடர்ந்து அதிகரிக்கும். இங்கு பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தும் பல மாறிகள் ஒன்றுக்கொன்று முரணாக பல்வேறு வீச்சில் வினையாற்றுகின்றன. ஒரு பக்கத்தால் வெட்டும் வேலையையும் இன்னொரு பக்கத்தால் ஒட்டும் வேலையையும் அரசாங்கம் ஒரே நேரத்தில் ஆற்றுகின்றது.

(பகுதி 4ல் தொடரும்)



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |
| **60.** | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

கல்வி tv CHANNEL-1

**17.11.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**17.11.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# எந்தத் தேர்தலுக்கும் முகம்கொடுக்க தயார்!

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பு

நிந்தவூர், நவ. 17

"நாட்டில் எதிர்காலத்தில் வரவிருக்கும் எந்தத் தேர்தலுக்கும் முகம் கொடுப்பதற்கு ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு தயாராகவே உள்ளது" என்று அந்தக் கட்சியின் அம்பாறை மாவட்ட செயல்குழுவின் செயலாளர் சரீப் முஹம்மட் ஹக்கீம் கூறியுள்ளார்.

கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கிராமிய அமைப்பாளர்களுக்கான செயலமர்வுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை பரடைஸ் மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த செயலமர்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், "முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்குடன் எமது மறைந்த மாபெரும் தலைவர் அஷ்ரபின் வழியில், அவரது கொள்கைகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்டதே ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பாகும்.

பட்டம், பதவிகளையோ சுய இலாபங்களையோ நோக்காகக் கொண்டு எமது கட்சி ஒரு போதும் செயல்படமாட்டாது. சமூகப் பணி, சமூக நிலைபற்றிய சிந்தனையுடன், இன்றைய சமூகக்கட்டமைப்பை அங்கலாய்த்த வண்ணமுள்ள எமது கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலியின் அனுபவமிக்க வழிகாட்டுதலில் நாம் கட்சிப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

சமூக நலனை நோக்காகக் கொண்ட தூய்மையான அரசியலையே நாம் முன்னெடுப்போம். எதிர்காலத்தில் எந்தத் தேர்தல் வந்தாலும் நாம் அதற்கு முகம் கொடுத்து போட்டியிடத்தயாராகவே உள்ளோம்" என்றார். (ஐ - 06)



# கைபேசி விற்பனையகத்தில் திருடிய சந்தேகநபர் கைது!

காத்தான்குடி, நவ. 17

கைபேசி விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து திருடியவரை தாம் கைது செய்துள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ. எஸ். ஏ. றஹீம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்படி நபர் கைது செய்யப்பட்டாரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான நபரிடமிருந்து தொலைக்காட்சிப் பெட்டி, மேசை மின்விசிறி, 26 கைபேசிகளின் பற்றரிகள் உள்ளிட்ட பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைதானவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதியுடன் பயணிப்பதானால் ஆக்கிரமிப்புகளை நிறுத்தவேண்டும்!

## கலையரசன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பிரச்னைக்கு ஒரு வருடத்துக்குள் தீர்வென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். இதற்காக நாம் அவருடன் சேர்ந்து பயணிக்க வேண்டுமானால் அவர் முதலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்புகளை நிறுத்த வேண்டும என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தமிழ் மக்களை முற்றாக ஏமாற்றியுள்ளது. பாது



காப்பு அமைச்சுக்கும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்குமென 539 பில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளதன் மூலம் இது ஒரு யுத்தகால வரவு - செலவுத் திட்டம் போலவே உள்ளது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான எந்த அறிவிப்புக்களும் இதில் கிடையாது. வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு வருடத்துக்குள் தீர்வு காணப்படுமென ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இத்தனை வரவேற்கின்றோம். தற்போது வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பிரச்னைக்கு ஒரு வருடத்துக்குள் தீர்வு காணும் நடவடிக்கையின் முதல் கட்டமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்புகளை நிறுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் அவருடன் தீர்வுக்காக இணைந்து பயணிக்க முடியும்.

வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த நீதி அமைச்சரால் விசேட செயலணி அமைக்கப்பட்டதுபோல் கிழக்கிலும் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட செயலணி அமைக்கப்பட வேண்டும். அரசாங்கமும் அமைச்சர்களும் வடக்கையும் கிழக்கையும் ஒரே மாதிரியாகவே பார்க்க வேண்டும் - என்றார். (ஐ)

# கிழக்கு அஞ்சல் மா அதிபரின் பிரிவுபசாரம் சிறப்பாக நடந்தது!

நிந்தவூர், நவ. 17

"கிழக்குப் பிராந்திய முன்னாள் அஞ்சல் மா அதிபர் திருமதி. ஜெயா னந்தி திருச்செல்வத்தின் ஆறு வருட சேவைக்காலப் பணிகள் என்றும் நினைவு கூரத்தக்கவையாகும். பிராந்திய அஞ்சல் குடும்பத்தின் நல்லபிமானத்தை வென்றவர் அவராவார்."

இவ்வாறு, அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் சங்கத்தலைவரும், அக்கரைப்பற்று அஞ்சல் அத்தியட்சகர் அலுவலக பிரதம இலிகிதருமான யூ.எல். எம்.பைஸர் புகழாரம் சூட்டினார்.



கிழக்குப் பிராந்திய முன்னாள் பிரதி அஞ்சல்மா அதிபரும், வாழைச்சேனை பிரதேச செயலாளருமான திருமதி. ஜெயானந்தி திருச்செல்வத்திற்கான பிரிவு பசாரமும் புதிய பிராந்திய அஞ்சல் மா அதிபர் காமினி விமலசூரியவை வரவேற்கும் ஒன்றிணைந்த நிகழ்வு நிந்தவூரில் நடைபெற்றது.

நிகழ்வுக்குத் தலைவமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட அஞ்சல் குடும்பத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு நிந்தவூர் மாவட்ட தொழிற் பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (ஐ- 06)

# மலேரியா விழிப்புணர்வு போட்டி மட்டக்களப்புக்கு இரு பரிசுகள்!

மட்டக்களப்பு, நவ. 17

2022ஆம் ஆண்டு தேசிய ரீதியாக சுகாதார அமைச்சுடன் மலேரியா நோய் தடுப்பு இயக்கம் இணைந்து நடத்திய மலேரியா நோய் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான போட்டியில் மட்டக்களப்பு மலேரியா நோய் தடுப்பு இயக்கம் இரு பரிசுகளை வென்றது.

மலேரியா தொடர்பான விழிப்புணர்வு போட்டியில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட மட்டக்களப்பு மலேரியா தடை இயக்கம் சார்பாக போட்டியிட்ட பட்டிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு யூ ரியூப் காணொலி பிரிவில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் பேஸ்



புக் பிரிவில் கிரான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு முதலாம் இடத்தையும் பெற்றன.

நாரஹன்பிட்டி தேசிய இரத்த மாற்று சேவைகள் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் போது இவர்களுக்கான நினைவுச் சின்னங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# ஐஸ் போதைப் பொருளை விநியோகித்த இருவர் கைது!

கல்முனை, நவ. 17

ஐஸ் போதைப்பொருளை விநியோகித்த குற்றச்சாட்டில் இரு சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடிப்படையாகக் கொண்டு வாழைச்சேனை நகரப் பகுதியில் நடத்திய சோதனை நடவடிக்கையில் இருவர் கைதாகினர்.

ஓட்டமாவடியை சேர்ந்த 51, 36 வயது நபர்களே இவ்வாறு கைதாகினர். அவர்களிடமிருந்து 5 கிராம் 140 மில்லி கிராம், 9 கிராம் 340 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், விநியோக நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார்சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

கைதான நபர் வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-01)



சதுப்பு நில காடுகளால் சூழப்பட்ட முதலையின் மிகநெருக்கமான ஒளிப்படம் இந்த ஆண்டுக்கான சதுப்பு நில ஒளிப்பட விருதை வென்றது. இந்தப் படத்தை டான்யா ஹூப்பர்மேன்ஸ் என்பவர் கியூபா சதுப்பு நிலத்தில் படமாக்கியிருந்தார்.

# சீனாவில் மீண்டும் கொரோனா உச்சம்

பீஜிங், நவ. 17

கொரோனா முதன்முதலாக கண்டறியப்பட்ட சீனாவில் தற்போது மீண்டும் தொற்று பாதிப்பு அதிகரிக்க தொடங்கி விட்டது.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பதால் சீனாவில் மீண்டும் கட்டுப்பாடுகள் கடுமையாக் கப்பட்டு வருகின்றன. பூச்சிய கோவிட் கொள்கையை பின்பற்றி வரும் சீனா, சிறிய பாதிப்பு என்றாலும் ஒட்டு மொத்த பகுதியையும் முடக்கி கொரோனா பரவலை தடுத்து வருகிறது. அந்த வகையில், சீனாவின் பிரபல மான பீகிங் பல்கலைக்கழகத்தில் கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டதால் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.

மாணவர்கள் அவசியமின்றி வெளியே வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வகுப்புகள் அனைத்தும் ஒன்லைன் முறைக்கு மாற்றப்பட்டுள்ளன. பீஜிங்கில் மட்டும் 350 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சீனா முழுவதிலும் 20 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டு இருக்கிறது. (ஐ)



# விண்ணில் பாய்ந்தது ஆர்மிடஸ் - 1 ஏவூர்தி

புளோரிடா, நவ. 17

'ஆர்டமிஸ்-1' ஏவூர்தியை நாஸா வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. எரிபொருள் கசிவு காரணமாக 45 நிமிடங்கள் தாமதமாக 'ஆர்டமிஸ்-1' விண்ணில் ஏவப்பட்டது.

நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்புவதற்கு முன்னோடியாக இந்த ஏவூர்தியை அனுப்பும் திட்டத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா நேற்று செயல்படுத்தியது.

'ஆர்டமிஸ்-1' என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்காக கடந்த ஒகஸ்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இயந்திர கோளாறு காரணமாக இரு முறை ஒத்திவைக்கப்பட்டது.

அப்பலோ விண்கல திட்டங்கள் நிறுத்தப்பட்ட 50 ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் முறையாக நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதற்கான இந்த ஆய்வு திட்டத்தை நாஸா உருவாக்கியுள்ளது.

இதற்கு முன்னோட்டமாக, சோதனை முறையில் 3 மனித மாதிரிகளுடன் அந்த ஆய்வு கலம் புளோரிடா மாகாணம், கேப் கனாவெரலில் உள்ள ஏவுதளத்திலிருந்து ஏவூர்தி மூலம் ஏவ திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், ஏவூர்தி எரிபொருள் கசிவு மற்றும் இயந்திர கோளாறு காரணமாக அந்த திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே நேற்று, 'ஆர்டமிஸ்-1' ஏவூர்தியை நாஸா வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

# போலந்தின்மீது வீழ்ந்தது உக்ரைனின் ஏவுகணையே!

வார்ஷோ, நவ. 17

**போலந்து நாட்டில் ஏவுகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததில் இருவர் உயிரிழந்தனர். இந்த ஏவுகணையை ரஷ்யாவே ஏவியது என்று முதலில் குற்றஞ்சாட்டப்பட்டது. எனினும், உக்ரைனிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையே இது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையையும் அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது.

போலந்தின்மீது ரஷ்யாவின் ஏவுகணை விழுந்ததால் நேட்டோ படைகள் போரில் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட நிலையில் இந்த ஏவுகணை உக்ரைனுக்கு சொந்தமானது என்று உறுதிப்படுத்தப்



பட்டுள்ளது. இதையடுத்து முழுமையான விசாரணைகளின் பின்னரே அடுத்த கட்ட விசாரணையை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# பாகிஸ்தானில் தலிபான்கள் தாக்குதலில் 6 பொலிஸார் பலி!

இஸ்லாமாபாத், நவ. 17

பாகிஸ்தான் தலிபான் இயக்கம் நேற்று நடத்திய தாக்குலில் பாகிஸ்தான பொலிஸ் அதிகாரிகள் 6 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியிலுள்ள கைபர் பக்துன் கவா மாகாணத்தில், ஆப் கானிஸ்தான் எல்லையிலிருந்து சுமார் 100 கிலோமீற்றர் தூரத் திலுள்ள ஷஹாப் கேல் எனும் கிராமத்தில் ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் மீது நேற்று இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 6 பொலிஸார் உயிரிழந்தனர் என மாவட்ட அதிகாரி ஒருவர், ஏ. எவ். பியிடம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலிபான் இயக்கம் 2007ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானின் தலிபான் இயக்கத்துக்கு பாகிஸ்தான் தலிபான் இயக்கம் பகிரங்கமாக விசுவாசம் தெரிவித்திருந்தது. எனினும், இவ்விரு இயக்கங்களும் தனித்தனியாக செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2024 ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் போட்டி!

புளோரிடா, நவ. 17

2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடுவேன் என்று நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார் டொனால்ட் ட்ரம்ப்.

அமெரிக்காவில் ஒருவர் இரு முறை ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும். முதல்தடவை ஜனாதிபதியாகும் ஒருவர் அடுத்த தேர்தலிலும் போட்டியிடுவது வழமை. அவ்வாறு போட்டியிடுபவர்களில் அநேகமானோர் வெற்றி பெறுவது உண்டு. எனினும், ஜிம்மி கார்டர், ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வரிசையில் மூன்றாவதாக இணைந்தார் டொனால்ட் ட்ரம்ப்.

கடந்த தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றார். ட்ரம்ப் தோல்வியடைந்தார். ஆனால், தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றன என்று சாடிய ட்ரம்ப், பல மாகாணங்களில் வழக்கு தொடுத்தார். அவை அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன. இதற்கிடையில், அமெரிக்காவின் பல பகுதிகளில் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் கலவரமாக வெடித்தது.



இது அமெரிக்க வரலாற்றில் பெரும் கரும்புள்ளியாக கருதப்படுகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் 2024 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார். இதன்போது, அமெரிக்காவை மீண்டும் வலுப்படுத்த நான் வெற்றி பெறுவது அவசியம்" என்று சூளுரைத்தார். கூடவே, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான பூர்வாங்க எழுத்துபூர்வ பணியையும் தொடங்கினார்.

இதுவரை ஜனநாயகக் கட்சி, குடியரசு கட்சி என்ற இருபெரும் கட்சிகளிலும் யாருமே 2024 ஜனாதிபதி தேர்தல் பற்றி பேசாத நிலையில் ட்ரம்ப் முதல் நபராக குடியரசு கட்சி சார்பில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். (ஐ)

# ஐ. பி. எல்லின் அணிகள் தக்கவைத்த வீரர்கள்!

சென்னை, நவ. 17

ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் டிசெம்பர் 23 ஆம் திகதி நடைபெறும் என பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது. கேரள மாநிலம் கொச்சியில் இந்த ஏலம் நடைபெறவுள்ளது.

இந்த ஏலத்துக்காக அனைத்து அணிகளும் தாங்கள் தக்கவைக்கப்போகும் வீரர்களின் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு தக்கவைக்கப்பட்ட அணிகளின் வீரர்கள் வருமாறு,

**சென்னை சுப்பர் கிங்ஸ்**

எம். எஸ். டோனி , ரவீந்திர ஜடேஜா, டெவோன் கொன்வே, மொயீன் அலி, ருதுராஜ் கெய்க்வாட், ஷிவம் துபே, அம்பதி ராயுடு, டுவைன் பிரிட்டோரியஸ், மகேஷ் தீக்ஷன, பிரசாந்த் சோலங்கி, தீபக் சாஹர், முகேஷ் சவுத்ரி, சிமர்ஜீத் சிங், துஷார் தேஷ்பாண்டே, துஷார் தேஷ்பன் ஹங்கே , மிட்செல் சான்ட்னர், மதீஷ பத்திரண, சுப்ரான் சேனாபதி

மீதமுள்ள தொகை: 20.45 கோடி மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 2

**மும்பை இந்தியன்ஸ்**

ரோஹித் சர்மா, இஷான் கிஷன், சூர்யகுமார் யாதவ், டெவால்ட் ப்ரீவிஸ், திலக் வர்மா, டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ரமன்தீப் சிங், டிம் டேவிட், ஜஸ்பிரித் பும்ரா, ஜோப்ரா ஆர்ச்சர், ஹிருத்திக் ஷோக்கீன், குமார் கார்த்திகேய சிங், ஜேசன் பெஹ்ரன்டோர்ப், அர்ஜுன் டெண்டுல்கர், அர்ஷத் கான், ஆகாஷ் மத்வால்

டிரேடிங் முறையில் வாங்கப்பட்ட வீரர்கள்: ஜேசன் பெஹ்ரெண்டோர்ப்

மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 3 மீதமுள்ள தொகை: 20.55 கோடி

**பஞ்சாப் கிங்ஸ்**

ஷிகர் தவான், ஷாருக் கான், ஜானி பேர்ஸ்டோவ், பிரப்சிம்ரன் சிங், பானுக ராஜபக்ஷ, ஜிதேஷ் சர்மா, ராஜ் பாவா, ரிஷி தவான், லியாம் லிவிங்ஸ்டோன், அதர்வா டைடே, அர்ஷ்தீப் சிங், பால்தேஜ் சிங், நாதன் எல்லிஸ், ககிசோ ரபாடா , ஹர்ப்ரீத் ப்ரார்

மீதமுள்ள தொகை: 32.2 கோடி ரூபாய். மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 3

**சன்ரைசர்ஸ் ஹைதராபாத்**

அப்துல் சமத், அய்டன் மார்க்ரம், ராகுல் திரிபாதி, கிளென் பிலிப்ஸ், அபிஷேக் சர்மா, மார்கோ ஜான்சன், வாஷிங்டன் சுந்தர், ஃபசல்ஹாக் ப்ருக்கி, கார்த்திக் தியாகி, புவனேஷ்வர் குமார், டி நடராஜன், உம்ரான் மாலிக்

மீதமுள்ள தொகை: 42.25 கோடி ரூபாய். மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 4

**கொல்கத்தா நைற் ரைடர்ஸ்**

ஷ்ரேயாஸ் ஐயர், நிதிஷ் ராணா, ரஹ்மானுல்லா குர்பாஸ், வெங்கடேஷ் ஐயர், அண்ட்ரூ ரசல், சுனில் நரைன், ஷர்துல் தாக்கூர், லாக்கி பெர்குசன், உமேஷ் யாதவ், டிம் சவுத்தி, ஹர்ஷித் ராணா, வருண் சக்ர வர்த்தி, அனுகுல் ராய், ரிங்கு சிங்

டிரேடிங் முறையில் வாங்கப்பட்டவர்கள்: ஷர்துல் தாக்கூர், ரஹ்மானுல்லா குர்பாஸ், லாக்கி பெர்குசன்

மீதமுள்ள தொகை: 7.05 கோடி ரூபாய் மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 3

**குஜராத் ரைட்டன்ஸ்**

ஹார்திக் பாண்ட்யா, ஷுப்மன் கில், டேவிட் மில்லர், அபினவ் மனோகர், சாய் சுதர்சன், விருத்தி மான் சாஹா, மேத்யூ வேட், ரஷித் கான், ராகுல் தெவாடியா, விஜய் சங்கர், முகமது ஷமி, அல்ஜாரி ஜோசப், யாஷ் தயாள், பிரதீப் நங்வான், தர்ஷன் நங்வான், ஜெயந்த் யாதவ், ஆர் சாய் கிஷோர், நூர் அகமது

மீதமுள்ள தொகை: 19.25 கோடி ரூபாய் மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 3

**லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ்**

கே.எல்.ராகுல், ஆயுஷ் படோனி, கரண் ஷர்மா, மனன் வோஹ்ரா, குயின்டன் டி கொக், மார்கஸ் ஸ்ரொய்னிஸ், கிருஷ்ணப்ப கவுதம், தீபக் ஹூடா, கைல் மேயர்ஸ், க்ருனால் பாண்டியா, அவேஷ் கான், மொஹ்சின் கான், மார்க் வூட், மயங்க் யாதவ், ரவி பிஷ்னோய்

மீதமுள்ள தொகை: 23.35 கோடி ரூபாய் மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 4

**றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்**

பப் டு பிளெசிஸ், விராட் கோலி, சுயாஷ் பிரபு தேசாய், ரஜத் படிதார், தினேஷ் கார்த்திக், அனுஜ் ராவத், பின் ஆலன், கிளென் மக்ஸ்வெல், வனிந்து ஹசரங்க, ஷாபாஸ் அகமது, ஹர்ஷல் படேல், டேவிட் வில்லி, கர்ன் ஷர்மா, மஹிபால், மஹிபால், மஹிபால். சிராஜ், ஜோஷ் ஹேசில்வுட், சித்தார்த் கவுல், ஆகாஷ் தீப்

மீதமுள்ள தொகை: 8.75 கோடி ரூபாய் மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 2

**ராஜஸ்தான் றோயல்ஸ்**

சஞ்சு சாம்சன், யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஷிம்ரோன் ஹெட்மியர், தேவ்தத் படிக்கல், ஜோஸ் பட்லர், துருவ் ஜூரல், ரியான் பராக், பிரசித் கிருஷ்ணா, டிரென்ட் போல்ட், ஓபேட் மெக்காய், நவ்தீப் சைனி, குல்தீப் சென், குல்தீப் யாதவ், சாஹல், சாஹல். , கே.சி கரியப்பா

மீதமுள்ள தொகை: 13.2 கோடி ரூபாய் மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள்: 4

**டில்லி கப்பிட்டல்ஸ்**

ரிஷப் பண்ட் , டேவிட் வோர்னர், பிருத்வி ஷா, ரிபால் படேல், ரோவ்மன் பவல், சர்பராஸ் கான், யாஷ் துல், மிட்செல் மார்ஷ், லலித் யாதவ், அக்சர் பட்டேல், அன்ரிச் நார்ட்ஜே, சேத்தன் சகாரியா, கமலேஷ் நாகர் கோடி, கலீல் அஹ்மத், லுங்கி அகமது , முஸ்தாபிசுர் ரஹ்மான், அமன் கான், குல்தீப் யாதவ், பிரவீன் துபே, விக்கி ஓஸ்ட்வால்

மீதமுள்ள தொகை: 19.45 கோடி ரூபாய் மீதமுள்ள வெளிநாட்டு வீரர்களுக்கான இடங்கள் - 2

# 4 இலங்கை வீரர்கள் தக்கவைக்கப்பட்டனர்!




சென்னை, நவ. 17

சர்வதேச இருபது - 20 தரவரிசையில் முதல் நிலை பந்துவீச்சாளராக விளங்கும் வனிந்து ஹசரங்க, பானுக ராஜபக்ஷ, மஹீஷ் தீக்சன, மதீஷ பத்திரண ஆகிய நான்கு இலங்கை வீரர்களை ஐ. பி. எல். அணிகள் தக்க வைத்துள்ளன.

2023 ஐ. பி. எல். போட்டிகள் தொடர்பான முதற் கட்ட வீரர்கள் ஏலம் குறித்த விவரங்கள் தற்போது வெளியாகியுள்ளன. இதன்படி, கடந்த வருடம் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கான விளை யாடிய வனிந்து ஹசரங்க இந்த வருடமும் தக்க வைக்கப்பட்டுள்ளார்.

அவரை போலவே அதிரடித் துடுப்பாட்ட வீரரான பானுக ராஜபக்ஷவும் பஞ்சாப் கிங்ஸ் அணியால் தக்க வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இணைந்த சுழல் பந்துவீச்சாளரான மஹீஷ் தீக்சன மற் றும் மதீஷ பத்திரண ஆகியோரும் இந்த வருடமும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் தக்க வைக்கப் பட் டுள்ளனர்.

இதேசமயம், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்கு விளையாடிய சாமீக கருணாரத்ன, குஜராத் ரைட் டன்ஸ் அணிக்கு தெரிவான துஷ்மந்த சாமீர ஆகியோர் அந்த அணிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# கவர்ச்சி காட்டினால் சிறை செல்ல நேரும்!

டுபாய், நவ. 17

உலகக் கிண்ண உதைபந்தாட் டப் போட்டியைக் காண கட்டார் செல்லும் பெண் ரசிகர்கள் கவர்ச்சி ஆடைகளை அணி தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட லாம் என்று கூறப்படுகின்றது.

உதைபந்தாட்ட உலகக் கிண் ணம் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் 32 நாடுகள் களமிறங்கவுள்ளன.

இந்தத் தொடரைக் காண உலகின் பல நாடுகளிலி ருந்தும் இலட்சக்கணக்கான ரசிகர்கள் அங்கு கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், கட்டாருக்கு வரும் பெண் ரசிகர்கள் கவர்ச்சியான ஆடைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும். அங் குள்ள சட்டங்களை அவர்கள் கவ னத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

பிபா தனது இணையதளத்தில் ரசிகர்கள் தங்கள் விருப்பப்படி ஆடைகளை அணியலாம் என்று கூறினா லும், அவர்கள் நாட்டின் சட்டங்களை மதிக்க வேண் டும் மற்றும் தமது உடல் அங்கங்களை மறைக்க



வேண்டும் எனவும் கூறியுள்ளது.

கட்டாருக்கு பயணம் செய்யும் பெண்கள் இறுக்க மான ஆடைகளை அணியவும் தடை செய்யப்பட்டுள் ளது.

ஆடை கட்டுப்பாட்டை பின்பற்றாதவர்களுக்கு கடுமை யான தண்டனை உண்டு. சிலரை சிறையில் அடைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# 2023 ஐ. பி. எல். தொடரிலும் டோனியே அணித் தலைவர்!

சென்னை, நவ. 17

2023 ஐ. பி. எல். போட்டியிலும் சென்னை அணி யின் தலைவராக டோனியே நீடிப்பார் என தலைமைச் செயல் அதிகாரி காசி விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

2022 ஐ. பி. எல். போட்டியின்போது சென்னை அணியின் தலைவராக ஜடேஜா நியமிக்கப்பட்டார். எனினும், போட்டியின் பாதியில் அவர் பதவி விலகி னார். இதனால் சென்னையின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டார் டோனி.

இந்நிலையில் 2023 ஐ. பி. எல். போட்டி பற்றி சென்னை அணியின் தலைமைச் செயல் அதிகாரி காசி விஸ்வநாதன் கூறியதாவது:

எல்லோருக்கும் தெரியும், 2023 ஐ. பி. எல். போட்டியிலும் தலைவன்தான் (டோனி) அணியை வழிநடத்துவார் என்று. இந்தமுறை சென்னை அணி நன்றாக விளையாடும். வீரர்களைத் தக்கவைக்கும் பணி மிகவும் கடினமானது. ஏனெனில், சென்னை



அணி அதன் வீரர்கள் மீது மிகவும் பாசத்துடன் இருக் கும். அவர்களும் அணிக்காக நன்குப் பங்களிப்பார்கள். வீரர்களை விடுவிக்கும் முடிவை எடுப்பது கடினமான ஒன்றாகும். விடுவிக்கப்பட்ட வீரர்கள் அணிக்கு மீண்டும் திரும்ப ஒரு வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் வருவார்கள். ஒருமுறை மோசமாக விளையாடினோம். அடுத்த வருடமே (2021) கோப்பையை வென்றோம். அதேபோல இந்த வருடமும் நடக்கலாம். கடந்த இரண்டு வருடங்களாக எங்களால் சொந்த மண்ணில் விளையாட முடியவில்லை. தற்போது மீண்டும் சேப் பாக்கம் மைதானத்தில் விளையாடப் போகிறோம். அதை மனத்தில் கொண்டு தான் வீரர்களைத் தேர்வு செய்துள்ளோம் - என்றார்.

# குழந்தையை கொன்றவரின் வாகனங்கள் தீக்கிரையாகின



மாத்தளை, நவ. 17

மூன்றரை வயது குழந்தையை அடித்துக் கொன்றதுடன் அந்த வீட்டிலிருந்த வர்களையும் காயப்படுத்தியவரின் வீட்டுக்குள் புகுந்த சிலர் அவரின் வாகனங்களை தீக்கிரையாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மாத்தளை - உக்குவெல பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு அயல் வீட்டுக்குள் புகுந்து ஒருவர் நடத்திய தாக்குதலில் மூன்றரை வயது குழந்தை உயிரிழந்தது. வீட்டிலிருந்த ஏனைய மூவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தியவரின் வீட்டுக்குள் புகுந்த சிலர் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றுக்கு தீ வைத்துள்ளதாக மாத்தளை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பெருந்தோட்ட தொழிலாளர் சம்பளத்தை உயர்த்துமாறு நிர்வாகங்களுக்கு சிபாரிசு

## அமைச்சர் ரமேஷ் பத்திரண



கொழும்பு, நவ. 17

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது. தற்போதைய சூழ்நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு அவசியம். இது தொடர்பில் தோட்ட நிர்வாகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும், கூட்டு ஒப்பந்தம் அமுலில் இல்லாமை சம்பள உயர்வுக்கு தடையாக அமைந்துள்ளது. எனினும், இது சம்பந்தமாக தோட்ட நிர்வாகங்களுடன் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாயை சம்பள நிர்ணய சபை ஊடாக நாமே பெற்றுக்கொடுத்தோம்." - என்றார். (ஐ)

# அக்குறணை மீண்டும் வெள்ளத்தில் மூழ்கியது!

## - ஏ- 9 வீதி போக்குவரத்தும் பாதிப்பு -



கண்டி, நவ. 17

கண்டி அக்குறணை நகரம் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கியது. இது ஒரு வாரத்தில் இரண்டாவது சந்தர்ப்பமாகும். இந்த வெள்ளத்தால் ஏ- 9 வீதியூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மலையகப் பிரதேசங்களுக்கு பெய்த கடும் மழை காரணமாக அக்குறணை ஊடாகப் பாயும் இரண்டு சிற்றாறுகள் பெருக்கெடுத்தன.

அதனால் கண்டி - மாத்தளை பிரதான வீதியில் அக்குறணை 6ஆம் கட்டை பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியது.

மகாவலி கங்கையின் கிளை ஆறுகளில் ஒன்றான பிங்கா ஓயாவும் அதன் மற்றொரு கிளை நதியும் அடிக்கடி பெருக்கடுப்பது தற்போது வழமையாகி விட்டது. இந்நிலைமை அடிக்கடி அக்குறணை நகரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

இதன் காரணமாக ஏ-9 வீதியில் பயணிப்போர் அடிக்கடி பாதிப்புக் குள்ளாகி வருகின்றனர். (ஐ)

# நுவரெலியா தமிழ் மகா வித்தியில் குடிதண்ணீரின்றி மாணவர் சிரமம்!

நுவரெலியா, நவ. 17

நுவரெலியா சென். கிலயர் தமிழ் மகா வித்தியாலயத்தில் பல வருடங்களாக குடிதண்ணீர் இன்றி மாணவர்களும் ஆசிரியர்களும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாடசாலையில் சுமார் 600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கின்றனர். அத்துடன், 25இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர்.

அத்துடன், இந்த பாடசாலையில் ஒவ்வொரு வருடமும் சாதாரண தரம், 5 ஆம் ஆண்டு புலமை பரீட்சை போன்றவற்றில் சிறந்த பெறுபேறுகளை பெற்று நுவரெலியா மாவட்டத்திலே சிறந்து விளங்குகின்றது. இவ்வாறான நிலையில், குறித்த பாடசாலையில் குடிதண்ணீர் இன்றி மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது விடயத்தில், மக்கள் பிரதி நிதிகள், அதிகாரிகள் உடன் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று பாடசாலை சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# மாணிக்கக் கல் அகழ்வு 19 சந்தேகநபர்கள் கைது

நுவரெலியா - மஹாஎலிய வனப் பகுதியில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 19 பேர் மஸ்கெலியா விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொகவந்தலாவை, நோர்வூட், பலாங்கொடை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை பொகவந்தலாவை பொலிஸாரிடம் ஒப்படைக்காமல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவ தற்காக ஹற்றன் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# காலநிலை அனர்த்தங்களால் நாட்டில் 8 பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, நவ. 17

இந்த மாதத்தில் கடந்த 15 நாட்களில் மட்டும் காலநிலை தொடர்பான அனர்த்த சம்பவங்களில் குறைந்தது 8 பேர் இறந்தனர். மேலும், 14 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பதுளையில் 3 பேர், புத்தளத்தில் இருவர், கண்டி, மாத்தளை மற்றும் திருகோணமலையில் தலா ஒருவர் உயிரிழந்தனர்.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் 1,076 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. சீரற்ற காலநிலையால் 15 மாவட்டங்களில் 3,784 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, கனமழை, பலத்த காற்று மற்றும் நிலச்சரிவு காரணமாக ஒரு வீடு இடிந்து வீழ்ந்துள்ளது. 220 குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன.

மோசமான வானிலையால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் தற்போது தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# பெருந்தோட்ட ஊழியர்களின் சம்பளம் 30வீதத்தால் உயர்வு!

நுவரெலியா, நவ. 17

பெருந்தோட்டங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் சம்பளம் 30 சதவீதத்தால் உயர்த்தப்படுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தோட்ட சேவையாளர் சங்கத்தின் பொருளாளர் தெரிவித்தார்.

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் மற்றும் இலங்கை முதலாளிமார் சம்மேளனம் இடையே இந்த கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தோட்ட சேவையாளர் சங்க பொருளாளர் மாரிமுத்து சுதாகர் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், 25 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படும். மிகுதி 5 சதவீதம் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வீட்டு வாடகை கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வருடாந்த சம்பள உயர்வை வருடத்துக்கு ஆகக் குறைந்தது 100 ரூபாயால் அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்களின் ஏனைய நலன்புரி விடயங்களும் உள்ளடக்கப்பட்டே ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் பெருந்தோட்ட உத்தியோகத்தர்கள் 70 சதவீத சம்பள அதிகரிப்பை கோரியிருந்த போதிலும், 30 சதவீத அதிகரிப்புக்கே இணக்கம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஐ)

# லிந்துலை தனி வீட்டு திட்டத்தை நிறைவுறுத்துமாறு கோரிக்கை!

நுவரெலியா, நவ. 17

லிந்துலை- கவுலினா தோட்டத்தில் அமைக்கப்பட்டு இடையில் நிற்கும் தனி வீட்டுத் திட்டத்தின் பணிகளை நிறைவுறுத்தி தருமாறு அதன் பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தப் பகுதியில், கடந்த 2013ஆம் ஆண்டு வீசிய பலத்த காற்றினால் 48 வீடுகளுக்கு சேதமடைந்தன. இந்நிலையில், அவர்களுக்கு பாதுகாப்பான இடங்களில் வீடுகளை அமைத்து வழங்க அப்போதைய அமைச்சர் பழனி திகாம்பரத்தால் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் 48 தனி வீடுகளுக்கான கட்டுமான பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

புதிய அரசாங்கத்தில் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற ஜீவன் தொண்டைமானால் முன்னெடுக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டாலும் இடைநிறுத்தப்பட்ட வீடமைப்பு திட்டத்தில் எந்தவொரு பணியும் முன்னெடுக்கப்படவில்லை.

அனர்த்தம் இடம்பெற்று, 9 வருடங்கள் கடந்த போதிலும் இன்னும் இம்மக்கள் குடியேற முடியாத சூழ்நிலையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்கின்றனர்.

இந்நிலையில், இந்த வீட்டுத் திட்டத்தை நிறைவுறுத்தித் திருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## கிழக்கைத்...

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வரவு செலவு திட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர்,

வடக்கு மாகாண தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு எதிர்வரும் சுதந்திர தினத்துக்குள் தீர்வு காணப்போவதாகவும் அதற்காக வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் விரைவில் பேச்சு நடத்தப் போவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு தொடர்பில் எமக்கு இரு பிரச்னைகள் உள்ளன. ஒன்று எதிர்வரும் சுதந்திர தினத்துக்குள் தமிழ் மக்களின் எந்தப் பிரச்னைக்கு தீர்வு காணப்படப்போகின்றது? இனப் பிரச்னைக்கா அல்லது பொருளாதாரப் பிரச்னைக்கா என்பது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும்.

அடுத்ததாக, வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடனே பேச்சு நடத்தப் போவதாக அவர் கூறியுள்ளார். அவர் நடத்தும் பேச்சு இனப்பிரச்னை தொடர்பானதாக இருந்தால் கிழக்கு இல்லாத வடக்குடனான ஜனாதிபதியின் எந்தப் பேச்சுக்களும் வெற்றிபெறப்போவதில்லை.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு சிறந்தது - வரவேற்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டுமானால், ஜனாதிபதி வடக்கு,கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். அவ்வாறான பேச்சுக்களே வெற்றி பெறும் - என்றார். (ஐ)

## வடக்கு...

ஐ. நா. மத்திய அவசர நிவாரண நிதியம் ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்ட 780.1 மெற்றிக் தொன் யூரியா உரம் விவசாய அமைச்சரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இதன்போதே, வடக்கின் மூன்று மாவட்டங்கள் உள்ளிட்ட நான்கு மாவட்டங்களின் விவசாயிகளுக்கு இலவசமாக யூரியா உரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை கமநல திணைக்களத்தின் உதவியுடன் இந்த வாரம் ஆரம்பமாகும் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## தமிழ்த்...

ஜனாதிபதி அழைப்பு விடுத்திருப்பது, வடக்கில் இருக்கும் தமிழ் தேசியத்தை பிரிப்பதற்கா என்ற சந்தேகம் எழுகின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதகிருஷ்ணன்.

பாராளுமன்றில் வரவு செலவு திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மக்கள் எதிர்பார்த்த வரவு-செலவுத் திட்டம் அமையவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழும் நிலையில் நிவாரணங்கள் கிடைக்கும் என்றே மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை.

வடக்கு மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்கு வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கின்றார். வடக்கில் மாத்திரம் அல்ல, கிழக்கிலும் பிரச்னை இருக்கின்றது. அதனால் வடக்கு - கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பேச வேண்டும். ஆனால், ஜனாதிபதி வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் அழைப்பு விடுத்திருப்பது வடக்கு - கிழக்கை பிரிப்பதற்கா அல்லது வடக்கில் இருக்கும் தமிழ் தேசியத்தை பிரிப்பதற்கா என்ற சந்தேகம் எழுகின்றது.

அத்துடன், மலையக மக்களுக்கும் பிரச்னைகள் இருக்கின்றன. அந்த மக்களின் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாட மலையக பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி கலந்துரையாடவேண்டும - என்றார். (ஐ)

## மூன்று புகலிடக்...

இந்நிலையில், டியாகோ கார்சியாவில் தங்கியுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் ருவாண்டாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்த மருத்துவ இடமாற்றங்கள் புகலிடக் கோரிக்கையாளர்கள் ருவாண்டாவுக்கு நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ருவாண்டா ஒப்பந்தத்தின் கீழ் பிரிட்டனின் பிரதான நிலப்பரப்பில் இருந்து நாடுகடத்தப்படுவது - 2022 இல் பிரான்ஸில் இருந்து படகுகளில் வந்தவர்களின் எண்ணிக்கை 40,000 ஐத் தாண்டிய பின்னர் , 2021 இல் இருந்து 10,000இற்கும் அதிகமாக - பிரித்தானிய நீதிமன்றங்களின் சவால்களுக்கு மத்தியில் பல மாதங்களாக நிறுத்தப்பட்டது.

எனினும், 100இற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் டியாகோ கார்சியாவில் தங்கியுள்ளனர். அவர்கள் பாதுகாப்பற்ற நாடுகளுக்கு அனுப்பப்படுவதைத் தடுக்கும் சர்வதேச சட்டக் கோட்பாட்டை மறுபரிசீலனை செய்யாமல் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட முடியுமா என்பதை அதிகாரிகள் தீர்மானிக்க காத்திருக்கின்றனர்.

புலம்பெயர்ந்தோர் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களின் வருகை தொடர்பாக இங்கிலாந்து அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் அதிகரித்துள்ள நிலையில் மருத்துவ இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டமைப்பு...

இடையிலான கருத்து பரிமாற்றங்கள் சீர்குலைந்துள்ளன. கருத்து வேறுபாடுகள் தோன்றுவதனால் புரிந்துணர்வு அற்ற சூழலே காணப்படுகிறது.

இதைத் தவிர, அங்கத்துவ கட்சிகளுக்கு உள்ளே ஏற்படுகின்ற பூசல்களும் முரண்பாடுகளும் அந்தக் கட்சிகளை மாத்திரம் பாதிக்காது ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் பாதகமாக உருவாகி வருகிறது.

இந்த சூழ்நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பாரிய நம்பிக்கை வைத்துள்ள தமிழ் மக்களினுடைய எண்ணங்களில் சந்தேகமும் குழப்பமும் தோன்றுவதை அவதானிக்க முடிகிறது. வெளிப்படையாகவே மக்கள் கூட்டமைப்பில் நிலவும் குழப்ப சூழ்நிலைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று பகிரங்கமாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையை தொடரவிடாமல் தடுத்து நிறுத்துவதும், பாரிய தேசிய இயக்கத்தை தொடர்ந்து சிக்கலுக்கு உட்படுத்துகின்ற நடவடிக்கைகளை கட்டுக்குள் கொண்டு வரவும் உடனடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் பிரதானிகளை கொண்ட ஒருங்கிணைப்பு குழுவை கூட்டுவது அவசியம் என்று நாம் கருதுகிறோம்.

ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை கூட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் மிக விரைவில் அதற்கான கால நேரத்தை அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# நாணய நிதியத்தின் கடன் டிசெம்பரில் கிடைக்கும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, நவ. 17

சர்வதேச நாணய நிதிய சபை 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் திட்டத்துக்கு டிசெம்பரில் அனுமதியளிக்கும் என அரசாங்கம் எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தை எட்டியதன் பின்னர், இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான கலந்துரையாடலை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சட்ட மற்றும் நிதி ஆலோசகர்கள் இலங்கையின் கடன் வழங்குநர்களுடன் முறைகள் தொடர்பில் கலந்துரையாடி வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஆதரவளிக்கவோ அல்லது அதன் கடனை மறுசீரமைக்கவோ தயாராக இல்லை என இந்தியாவோ அல்லது சீனாவோ எந்த நாடும் கூறவில்லை. எனவே, அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதல் கிடைக்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை, பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் நிவாரணங்களை வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். சமுர்த்தி பயனாளிகள், முதியோர், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு பெறுபவர்களுக்கு மேலதிக நிதியுதவி வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிதி நெருக்கடியால் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கியவர்களும் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள மேலதிக மானியத்திற்கு தகுதியுடையவர்களாவர்.

இத்திட்டம் ஜனவரி முதல் ஏப்ரல் வரை நடைபெறும் என்றும், இத்திட்டத்திற்காக 43 பில்லியன் ரூபாயை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. தேவைப்படுவோருக்கு பாதுகாப்பு வலையமைப்பை வழங்கும் போது, வரவு - செலவுத் திட்டத்தினூடாக, உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் மற்றும் நிலையான நிதி அமைப்பை உருவாக்கவும் பல முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டுக்கான நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவு திட்டத்தை எதிர்க் கட்சிகள் எதிர்ப்பதற்கு எந்த காரணமும் இல்லை - என்றும் கூறினார். (ஐ)

## நீரில் மூழ்கி...

பிடித்துள்ளார்.

சிறிதுநேரத்தில் இவரைக் காணவில்லை என்று சகமீனவர்கள் தேடிய போது நீருள் சடலமாகக் காணப்பட்டார்.

சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

## வரவு - செலவு...

ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திங்கட்கிழமை சபையில் சமர்ப்பித்தார்.

வரவு - செலவு திட்டம் தொடர்பில் விமல் வீரவன்ஸ தலைமையிலான 'உத்தர லங்கா சபாகய' எனும் அரசியல் கூட்டணி கூடி ஆராய்ந்தது.

இந்த வரவு - செலவு திட்டத்தில் மக்கள் நலத்திட்டங்கள் இல்லை என்பதாலும், மேலும் சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டும் எதிராக வாக்களிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி நாட்டு வளங்களை விற்பதற்கு ஜனாதிபதி முற்படுகின்றார். எனவே, இந்த வரவு - செலவு திட்டத்தை தோற்கடிப்பதற்கு முயற்சி எடுக்கப்படும். பிரதான எதிர்க்கட்சி தோற்கடிக்க முயன்றால் அதற்கு ஆதரவளிப்போம் - என்றார். (ஐ)

## பாரம்பரிய...

கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

உள்நாட்டுப் பிரச்னைகள் மற்றும் வெளிப்புற காரணிகளால் மோசமடைந்துள்ள விடயங்கள் காரணமாக இலங்கை பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை தீர்ப்பதற்கும் தெளிவான பாதையையும் திசை மாற்றத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வகுத்துள்ளார்.

இதே அரசியல் கதையை தொடராமல் அனைத்து தரப்பினரும் புதிதாக சிந்திக்க வேண்டும். கடந்த 70 ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டதை விட எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளே இலங்கை பிரஜைகளின் தற்போதைய துன்பங்களுக்கு காரணம்.

கொள்கை விடயங்களில் எவருக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால், அனைவரும் ஒன்றுபட வேண்டிய நேரம் இது என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

மேலும், 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, ஜனாதிபதி விக்ரமசிங்க பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளார்.

ஏற்றுமதியை அதிகரிப்பது, சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக செயற்படுத்துவது போன்ற விடயங்களில் அனைவரும் உடன்படலாம் எனவும், அதேவேளை நாட்டில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஆதரவளிப்போம். எனவே, மக்களின் இன்னல்களைப் போக்கும் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றம் ஜனாதிபதிக்கு உதவ வேண்டும்- என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் மக்களை நாம் கைவிட மாட்டோம்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, நவ. 17

அரசாங்கத்தின் எந்தவொரு வேலைத் திட்டங்களி லும் தமிழ் மக்களை புறக்கணிக் கவோ அல்லது கைவி டவோ மாட்டோம். வடக்கு மக்களை புறக் கணிக்க வில்லை என நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அர சமைப்பு மறுசீர மைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ஷ தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வரவு - செலவு திட்ட விவாதத்தின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையசரன் முன்வைத்த கருத்துகளுக்கு பதிலளிக்கை யிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் போதைப்பொருள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய இரண்டு வாரங் களுக்கு முன்னர் நான் அங்கு சென்றிருந்த போது ஆளுநர் தலைமையில் விசேட செயலணி ஒன்றை அமைத்துள்ளேன்.

இதேபோன்று இது தொடர்பான சட்டங்களை இறுக்கப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் இது போன்று செயலணிகளை அமைத்து நடவடிக்கை களை முன்னெடுக்கின்றோம். நாங்கள் வடக்கு மக் களின் பிரச்னைகளை புறக்கணிக்கவில்லை.

இதேவேளை, எவ்வித அழைப்பு இன்றி கடந்த வாரத்தில் யாழ்ப்பாணம் சென்றோம். அங்கே இந்தி யாவில் இருந்து நாடு திரும்பிய 11 ஆயிரத்து 200 பேர் வரையிலானோர் உள்ளனர். அவர்களில் பலர் அடை யாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் தொடர்பான பிரச் னைகளை எதிர்நோக்குகின்றனர். அதன்படி அங்கு மூன்று நடமாடும் சேவைகளை நடத்தியுள்ளோம்.

அதேபோன்று யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நட்டஈடு வழங்கவும், அதனை இரட்டிப் பாக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். உங் களையோ, உங்கள் சமூகத்தையோ நாங்கள் புறக்கணிக் கவோ, கைவிடவோ இல்லை - என்றார். (ஐ)




# வடக்கு விவசாய அமைச்சின் மரநடுகை இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 17

**வடக்கு மாகாண மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் அல கால் ஏற்பாடு செய்யப்பட்ட மரம் நடுகை விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடக்கு மாகாணத் தின் 5 மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ. சிவபால சுந்தரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மரம் நடுகை விழாவை விவசாய திணைக்களம், நீர்ப்பா சனத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் மீன்பிடி பிரிவு ஆகிய இணைந்து ஏற்பாடு செய்வதுடன் மர நடுகை விழாவுக்கான ஒத் துழைப்பை மரம் நடுகை இடங் களின் உள்ளூராட்சி சபைகள் வழங்குகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல் லுண்டாய் பகுதியிலும் கிளிநெச்சி மாவட்டத்தில் இரணைமடு இடது கரை பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏ-9 மாங்குளம் வீதியின் இருமருங்கிலும் வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம் அரசு விதை உற்பத்தி பண்ணைப் பகுதியிலும் மன்னார் மாவட் டத்தில் பாலாவி திருக்கேதீஸ்வரம் பகுதியிலும் ஏறக்குறைய 1,500 மரங்கள் நாட்டப்படவுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக வட மாகாண மர நடுகை மாத பகுதி யில் வட மாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ள திணைக்கள வளாகங்களில் ஏறக்குறைய 600 பழ மரக்கன்றுகள் நாட்டுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன -என்றார். (ஐ)

# தொழில் முயற்சிகளை இலகுவாக்க பாராளுமன்ற விசேட குழு நியமனம்!

கொழும்பு, நவ. 17

இலங்கையின் வணிக தொழில்முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறை சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவு, விதப்புரைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று சபைக்கு அறிவித்தார்.

இந்த பாராளுமன்ற விசேட குழுவின் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே பணியாற்ற வுள்ளார். அத்துடன், இக்குழுவின் உறுப்பினர்களாக அமைச்சர் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் அ. அர விந்த் குமார், பாராளுமன்ற உறுப்பினர்களான தரு மலிங்கம் சித்தார்த்தன், அநுர பிரியதர்ஷன யாப்பா, மொஹமட் முஸம்மில், சமிந்த விஜயசிறி, வருண லியனகே, சஞ்ஜீவ எதிரிமான்ன, நாலக பண்டார கோட்டேகொட, திருமதி கோகிலா குணவர்தன, லலித் வர்ண குமார ஆகியோர் நியமிக்கப்பட்டுள் ளனர் என்றும் கூறினார். (ஐ)

## பாடசாலை உபகரணங்களின் விலை 300 வீதத்தால் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 17

பாடசாலை உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள் உள்ளிட்டவற்றின் விலைகள் 300 வீதத்தால் அதிகரித் துள்ளன என்று பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின் றனர்.

இதனால் அடுத்த ஆண்டுக்கான பாடசாலை உபகர ணங்கள் பயிற்சிப் புத்தகங்கள் உள்ளிட்ட பொருட் களை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

10 ரூபாய்க்கு விற்கப்பட்ட பென்சில் 40 ரூபாயாக வும், பேனா 30 ரூபாயாகவும் 55 ரூபாய்க்கு விற்கப்பட்ட பயிற்சிப் புத்தகம் 120 ரூபாயாகவும் உயர்ந்துள்ளன.

மேலும் 1200 ரூபாயாக இருந்த பாடசாலை காலணிகள் மற்றும் பைகளின் விலை 3000 ரூபாயாக உயர்ந்துள்ளன. தண்ணீர் போத்தல்கள் என அனைத்து பொருட்களின் விலையும் அதிகரித் துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதுதவிர, வண்ண பென்சில்கள், பென்சில் பொக்ஸ்கள் போன்ற அனைத்து பொருட்களின் விலைகளும் பெருமளவு அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விலைகளை குறைத்தது சதொச

கொழும்பு, நவ. 17

லங்கா சதொச நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் அத்தியா வசிய பொருட்கள் சிலவற்றின் விலை களை குறைத்துள்ளது.

இதன்படி, பருப்பு ஒரு கிலோ 9 ரூபாயாலும், உள்நாட்டு ரின் மீன் 425 கிராம் 45 ரூபாயாலும், அரிசி ஒரு கிலோ 5 ரூபாயாலும் குறைக்கப்பட் டுள்ளது. (ஐ)

# திலினி உள்ளிட்டோரின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, நவ. 17

நிதி மோசடி குற்றச்சாட்டு குறித்து கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திகோ நிறுவனத்தின் தலைவர் திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்த்தன, பொரளை சிறீ சுமண தேரர் மற்றும் இசுரு பண்டார ஆகியோரை நவம்பர் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் திலினி கமகே நேற்று உத்தரவிட்டார்.

மெய்நிகர் தொழில்நுட்பம் மூலம் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தி லேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# பிரபல வர்த்தகர் கண்டியில் கொலை!

கண்டி, நவ. 17

கண்டி திகன நகரில் பணம் வட்டிக்கு வழங்கப் படும் நிறுவனம் ஒன்றை நடத்திச் சென்ற நபர் ஒருவர் நேற்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியானார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 55 வயதான தொன் ரங்கஜீவ மங்கள குணவர்த்தன என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வட்டிக்கு பணம் கொடுப் பதற்கு மேலதிகமாக வாகனங்களை வாடகைக்கு விடும் வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ளார். அத்துடன், பல முக வர் நிலையங்களையும் நடத்திச் சென்றவர் என தெரிவிக் கப்பட்டுள்ளது. திகன நகரிலுள்ள பல கட்டடங்கள் இவ ருக்குச் சொந்தமானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபருக்கு அருகிலிருந்து துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தற்கொலையா அல்லது எவரேனும் துப்பாக்கிச் சூடு நடத்தினரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.